Registered as a Newspaper

பக்கங்கள் 16 விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 298

புதன்கிழமை 20 செப்ரெம்பர் 2023

புரட்டாசி




தியாக தீபம் திலீபன் நினைவேந்தல்

# முல்லையில் தடைவிதிக்க மறுப்பு கொழும்பில் தடைவிதித்து உத்தரவு

யாழ்ப்பாணத்திலும் தடை கோரி மனு

**முல்லைத்தீவு, செப்ரெம்பர் 20**

**தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடைகோரிய முல்லைத்தீவு பொலிஸாரின் விண்ணப்பத்தை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ள அதேவேளை கொழும்பில் தடைகோரிய பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. யாழ்ப்பாணத்திலும் நினைவேந்தலுக்கு தடைகோரி பொலிஸாரால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.** »15

இந்து சமுத்திரத்தில்

## இராணுவ ஒத்திகைக்கு இலங்கை ஆதரவில்லை

ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

நியூயோர்க், செப். 20
இந்து சமுத்திரத்தில் இடம்பெறும் எந்தவொரு இராணுவ ஒத்திகைக்கும் இலங்கை ஆதரவளிக்காது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். »15

## சீனா, இந்தியாவுடன் கூட்டணி வைக்கோம்

நியூயோர்க்கில் ரணில் தெரிவிப்பு

நியூயோர்க், செப். 20
இலங்கை அரசாங்கம் இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது »15

யாழ்ப்பாணத்தில்

## டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் செப். 25 ஆம் திகதி ஆரம்பம்!!!

யாழ்ப்பாணம், செப். 20
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயானது தற்போது கட்டுப்பாட்டில் இருந்தாலும் எதிர்வரும் 5 மாதங்களில் நோய் பரம்பல் தீவிரமடையும் அபாயம் உள்ளதாகவும் அதனைக் கட்டுப்படுத்த எதிர்வரும் 25ஆம் திகதி முதல் இரு வாரங்கள் டெங்குக் கட்டுப்பாட்டு »15

தருமபுரத்தில்

## போலி நாணயத்தாள்; வர்த்தகர் கைது!

கிளிநொச்சி, செப். 20
கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போலி நாணயத்தாள்களை விநியோகித்த குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். »14

## கை இழந்த சிறுமிக்காக ஒன்றிணைந்த பிஞ்சுகள்

பாடசாலையில் உற்சாக வரவேற்பு

யாழ்ப்பாணம், செப்.20
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சலுக்காகச் சேர்க்கப்பட்டிருந்த »15










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகதீபம் திலீபனின் ஊர்தி நல்லிணக்கத்துக்கு குந்தகமாம்!



## சொல்கிறார் செந்தில் தொண்டமான்

**திருகோணமலை, செப். 20**

**சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்தில், திலீபனின் உருவப்படம் தாங்கிய வாகன பேரணியை முன்னெடுத்தமை இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை இல்லாமல் ஆக்கும் செயல் என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும், தியாகதீபம் திலீபனின் உருவப்படத்துடன் வந்த ஊர்தியின் மீதும் திருமலையில் தாக்குல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்டவர்களின் பெயரைக்கூட விளிக்காமல், ஆளுநர் செந்தில் தொண்டமானால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாட்டின் நல்லிணக்கத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆளுநர் என்ற வகையில் எனக்கு உள்ளது. திலீபனின் நினைவேந்தல் ஊர்வலம் நாடாளுமன்ற உறுப்பினரால், பொலிஸ் அனுமதி இன்றி, சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்தை ஊடுருவிச் சென்றது. இது இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை இல்லாமல் ஆக்குகிறது. தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அதிகவனத்துடன் செயற்படக்கூடிய பொறுப்பு உள்ளது. அப்பொறுப்பில் அவதானக் குறைவாகச் செயற்படுவது நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைப்பதுடன், சட்ட ஒழுங்கும் பாதிப்படைகின்றது.

எதிர்காலத்தில் நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் எந்தச் செயற்பாட்டைத்தவிர்த்துக்கொள்ள வேண்டும். இது குறித்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன்- என்றுள்ளார். (ஒ-44)

# தொண்டமானுக்கு எதிராக கையெழுத்துப் போராட்டம்

திருகோணமலை, செப். 20

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு எதிராக ஒரு இலட்சம் கையெழுத்துகளை திரட்டும் நடவடிக்கை ஐக்கிய சங்கத்தால் திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக பிக்குகள் கடந்த 28ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். விகாரை நிர்மாணிப்பதால் காணப்படும் பிரச்சினை குறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு மாவட்டச் செயலர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கம் அளிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு பிரதேசமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறான தொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாகச் செயற்படுவீர்கள் என ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது தெரிவித்திருந்தார்.

பிரதேச செயலரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேசசபையின் அனுமதியின்றி எந்தவொரு கட்டுமானப்பணிகளும் முன்னெடுக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில், ஆளுநரை பதவி விலக்க வேண்டுமென வலியுறுத்தியே ஒரு இலட்சம் கையெழுத்தை திரட்டும் நடவடிக்கையை ஐக்கிய சங்கம் ஆரம்பித்துள்ளது. (ஒ-இ)

# கிராம அலுவலகம் திறப்புவிழா இன்று

யாழ்ப்பாணம், செப். 20

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குப்பிழான் தெற்கு கிராம அலுவலகத் திறப்பு விழா நிகழ்வு இன்று புதன்கிழமை குப்பிழான் மடத்தடியில் இடம்பெறவுள்ளது.

குப்பிழான் விவசாய சம்மேளனத் தலைவர் செ.நவரத்தினராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் தவச்செல்வம் முகுந்தன், கௌரவ விருந்தினராக உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி கெ.இந்திரமோகன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)

# பல்கலை நுழையும் மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியிலிருந்து 2022ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞா.ஆதவன் பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ளார். (ச-66)

# உயர்தரப் பரீட்சை: ஆணையாளரிடமே முடிவு

கொழும்பு, செப். 20

க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளை ஒத்திவைப்பதற்கான யோசனைகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விரைவில் அறிவிப்பார் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுத் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைகளை அடுத்த வருடம் ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைக்குமாறு முன்மொழிவை சமர்ப்பித்த, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரத்னவின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஒ-இ)

# மன்னாரில் நீர் விநியோகத்தடை

மன்னார், செப். 20

மன்னார் நீர் வழங்கல் திட்டத்தில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று புதன்கிழமை 20ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலான 9 மணி நேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் நடைமுறையாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

முருங்கன் மற்றும் அதனை அண்டிய பகுதிகள், மன்னார் நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகள், பள்ளிமுனை மற்றும் அதனை அண்டிய பகுதிகள், எழுத்தூர் மற்றும் அதனை அண்டிய பகுதிகள், தோட்டவெளி, சிறுத்தோப்பு, எருக்கலம்பிட்டி, வங்காலை மற்றும் அதனை அண்டிய பகுதிகள், அடம்பன் மற்றும் அதனை அண்டிய பகுதிகள், திருக்கேதீஸ்வரம் மற்றும் நாகதழ்வு ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையால் பாதிக்கப்படும். (ஒ-213)

# காணாமற்போன சடலத்தை ஒப்படைத்தால் ரூ.20 இலட்சம்

வவுனியா, செப். 20

வவுனியா, இராசேந்திரங்குளம் மயானத்தில் புதைக்கப்பட்ட நிலையில் காணாமற்போன சிறுமியின் சடலத்தை மீள ஒப்படைத்தால் 20 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என சிறுமியின் அம்மம்மாவான குணரட்னம் ரோகினி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2 வயதுச் சிறுமி நீர்த் தொட்டியில் தவறி விழுந்து இறந்தார். சிறுமியின் உடல் இராசேந்திரங்குளம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இருப்பினும் கடந்த 5ஆம் திகதி சிறுமியின் உடல் இனந்தெரியாத நபர்களால் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான உண்மையான தகவல் தெரிந்தவர்கள் தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் வழங்கினால் 10 இலட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும். சிறுமியின் சடலத்தை எடுத்தவர்கள் மீளக் கையளிக்கின்றபோது 20 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும்.

சிறுமியின் சடலம் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 0766091158 அல்லது 0754986953 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தெரியப்படுத்தவும்- என்று கோரிக்கை விடுத்தார். (ஒ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிஸ்டம்' சீர்செய்யப்பட்டாலே நாட்டை முன்னேற்ற முடியும்!

## உத்திக பிரேமரத்ன எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, செப். 20**

**என்னை இலக்குவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமானது நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளமையைப் பிரதிபலிக்கிறது. அந்த மாற்றத்தைக் கொண்டு வரும் வரை எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது.**

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை எழுப்பி உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தத் தாக்குதலை நடத்தியது யார்? என்பதை விடவும் நாட்டில் தற்போதுள்ள முறைமையால் தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கும்.

நாட்டில் 'சிஸ்டம்' சரியில்லை. என்னை இலக்குவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் கூட இதனையே பிரதிபலிக்கின்றது.

எமது நாட்டில் சமூக முறைமையும் தவறு, அரசியல் முறைமையும் தவறு. இந்தத் தவறால்தான் நாடு இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அந்தத் தவறைச் சரியாக அடையாளம் கண்டு, நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த மாற்றத்தைக் கொண்டுவரும்வரை எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது- என்றார். (ச-44)

# சோமாலியாவுக்கு உதவிகளை நிறுத்திய ஐ.நா.

கொழும்பு, செப்.20

உலக உணவுத் திட்டத்தின் கீழ் சோமாலியாவுக்கான உதவியை, ஐரோப்பிய ஒன்றியம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

கடுமையான பஞ்சத்தைத் தவிர்க்கும் வகையில் உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட உதவிகளை, சோமாலிய அதிகாரிகள் மோசடி செய்துள்ளமை ஐக்கிய நாடுகளின் விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதையடுத்து சோமாலியாவுக்கான உதவியை ஐரோப்பிய ஒன்றியம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் தெரிவித்துள்ளனர் என்று ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது. (எ-இ)

# நடைபாதை ஆக்கிரமிப்பு; பாதசாரிகள் சிரமத்தில்!

வவுனியா, செப்.20

வவுனியா நகரசபைக்குட்பட்ட இடங்களில் உள்ள நடைபாதைகளை சிறு வியாபார நிலையங்கள் ஆக்கிரமித்துள்ளமையால் பெரும் சிரமத்தினை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது என்று பாதசாரிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொது மருத்துவமனைச் சந்தியில் இருந்து கொரவப்பொத்தான வீதி மற்றும் சந்தை உள்வட்ட வீதி என்பன இவ்வாறு நடைபாதை வியாபாரிகளின் ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் விபத்துகளைச் சந்திக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த காலங்களில் நகரசபை நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும் அண்மைக்காலமாக நகரசபையும் இந்த விடயத்தில் தமது கண்காணிப்பைச் செலுத்தாமையால் இவ்வாறான ஆக்கிரமிப்புகள் தொடர்கின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-110)

# ஊழலை ஒழிக்க அமெ.விடம் தொழில்நுட்ப ஆலோசனை!

கொழும்பு, செப். 20

ஊழல், இலஞ்சம் போன்றவற்றை ஒழிப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்குமாறு இலங்கை அரசாங்கம் அமெரிக்காவிடம் கோரியுள்ளது.

இலங்கை - அமெரிக்க வர்த்தக, முதலீட்டு உடன்படிக்கை தொடர்பான கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இலங்கையின் சார்பில் கே.ஜே.வீரசிங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க வர்த்தக பதில் பிரதிநிதி பிரண்டன் லின்ச், ஜனாதிபதியின் பதில் செயலாளர் சந்தனி விஜயவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் ஊழலற்ற முகாமைத்துவத்தின் அவசியத்தை அமெரிக்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

இதன்போது ஊழல் ஒழிப்புத் தொடர்பான சட்டங்களை இயற்றும்போது உடனுக்குடன் இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளுமாறும், ஊழல் ஒழிப்புத் தொடர்பான பயிற்சிகளையும் தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் வழங்குமாறும் அமெரிக்காவிடம் கேட்டுக்கொண்டனர். அதற்குப் பதிலளித்த அமெரிக்கப் பிரதிநிதிகள், தொழிலாளர் நலச் சட்டங்களை இயற்றும்போது பொதுமக்களின் கருத்துகளும் உள்வாங்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தனர். (ச-6)

# நீதிமன்றை நாடும் ஐ.ம.சக்தி!

கொழும்பு, செப்.20

திருத்தம் செய்யப்பட்டு மீள நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் நீதிமன்றத்தை நாடவுள்ளது.

சட்டவரைவில் எவ்வாறான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டாலும், அதற்குத் தாங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார். (எ-இ)





**எ**ந்தப் புத்துக்க எந்தப் பாம்பு இருக்குமோ எண்டதே தெரியாத காலமாப் போட்டுது. பார்க்க எல்லாரும் அப்பாவியள் மாதிரித்தான் இருப்பினம், ஆனால் அவை செய்யிற வேலையள் எல்லாம் வேற லெவல்ல இருக்கும். போதைப்பொருள் யாவாரத்தில இப்ப ஆம்பிளையளை விடவும் பொம்பிளையள் தான் கடுமையா இறங்கியிருக்கினம். அதுவும் வெள்ளையும் சொள்ளையுமா வெளிக்கிட்டு, நல்ல உத்தியோகம் பார்க்கிற பொம்பிளையள் இந்தப் போதைப்பொருள் பிஸ்னஸ் செய்தால் ஆருக்குத்தான் டவுட் வரப்போகுது?

கிட்டடியில யாழ்ப்பாணத்தில உள்ள லொட்ஜ் ஒண்டில நாலுபேர் ஐஸ் போதைபொருளோட பிடிபட்டவை. அதில ஒராள் ஒரு பிரைவேட் ஹொஸ்பிட்டலில வேலை செய்யிற நேர்ஸூம் எண்டதுதான் பெரும் அதிர்ச்சி. அந்த நேர்ஸ் எப்பிடி இந்தப் போதைப்பொருள் கும்பலிட்டச் சிக்கினவா? அவாவுக்கும் அந்த லொட்ஜ் மனேச்சருக்கும் ஏதோ ஒருவகையில தொடர்பு இருந்திருக்கு. அதால அடிக்கடி அந்த லொட்ஜூக்கு போட்டு வாறவா. அப்பிடிப் போய்வரேக்க, அந்த மனேச்சர் ரவுணுக்க பான்ஸி கடை வைச்சிருக்கிற ஒரு முஸ்லிம் பெடியனை அவாவுக்கு அறிமுகப்படுத்த, அவன் தான் இந்த நேர்ஸூக்கு ஐஸ் போதைப் பொருளைப் பாவிக்கப் பழக்கி இருக்கிறான். அதுக் குப் பிறகு அந்த நேர்ஸூக்கும், முஸ்லிம் போதைப் பொருள்காரனுக்கும் நேரடி 'லிங்க்' வந்திட்டு. அப்பிடியே அந்த நேர்ஸ் மூலமா இன்னொரு பள்ளிக்கூடப் பிள்ளைக்கும் ஐஸ் போதையைப் பழக்கிப் போட்டாங்கள்.

போதைப்பொருளின்ர கெட்டபழக்கமே ஒருக்காப் பாவிச்சாலே பிறகு அதை விடேலாது. நெடுகப் பாவிக்கச் சொல்லி இழுக்கும். நேர்ஸூம், அந்தப் பள்ளிக்கூடப் பிள்ளைக்கும் தொடர்ந்தும் ஐஸ் போதைப்பொருள் தேவைப்பட, அதுக்காக அவை அந்த முஸ்லிம் பெடியனோட லொட்ஜூக்கு போக வெளிக்கிட்டினம். பிறகு அந்தப் பள்ளிக்கூடப் பிள்ளையோட படிக்கிற வேற பொம்பிளைப் பிள்ளையளுக்கும் ஐஸ் போதையைப் பரப்பி தங்கட வட்டத்தைப் பெரிசாக்கியிருக்கினம், அந்தப் பிள்ளையளும் காசில்லாம் ஐஸ் போதை வேணுமெண்டதுக்காக லொட்ஜூக்கு வர வெளிக்கிட்டிருக்கினம். இப்ப முஸ்லிம் போதைப்பொருள்காரன் தான் மட்டுமில்லாமல் வேற ஆக்களையும் அங்க கூட்டியரத் தொடங்கியிருக்கிறான். அந்தப் பொம் பிளைப் பிள்ளையளை கண்டபடி வீடியோவும் எடுத்திருக்கிறான். அந்த வீடியோவை வைச்சும் பிஸ்னஸ் செய்யத் தொடங்கியிருக்கிறான். அதை விட, கனபேரிட்ட அந்தப் பள்ளிக்கூடப் பிள்ளையளின்ர வீடியோவைக் காட்டி 'இந்தப் பிள்ளையள் தேவையெண்டால் ஐஸ் வாங்கவேணும்' எண்டும் ஆசை காட்டி, அவையையும் போதைப் பொருளுக்கு அடிமையாக்கியிருக்கிறானாம், நல்லகாலம் இப்ப அவனும் அவன்ர கும்பலும் மாட்டுப்பட்டதால கனபேர் தப்பிட்டினம்.

இப்பிடி எத்தினையோ அநியாயங்கள் எங்களைச் சுத்தி நடந்துகொண்டிருக்கு. எங்கட இளம் பிள்ளையளை நாசமாக்கவெண்டு 'பிளான்' பண்ணி வேலை செய்யிறாங்கள். அதுக்கு எங்கடையள் சிலதுகளும் துணைபோகுதுகள். இப்பிடியான கோடரிக்காம்புகளால தான் கஞ்சாவோட தொடங்கின போதைப் பொருள் பிஸ்னஸ் இப்ப உயிர் குடிக்கிற ஐஸ் போதையில வந்து நிக்குது.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீக்கியத் தலைவரை கனடாவில் கொலை செய்தது இந்தியாவே!

## கனேடியப் பிரதமர் பரபரப்புக் குற்றச்சாட்டு இந்திய இராஜதந்திரியையும் வெளியேற்றியது



**ஒன்ராறியோ, செப்.20**

**கனடாவில் சீக்கிய மதத்தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்திய அரசாங்கமே உள்ளது என்பதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ தெரிவித்துள்ளார். இது சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

கடந்த ஜுன் மாதம் 18ஆம் திகதி நிஜார் பிரிட்டிஷ் கொலம்பியாவில் சீக்கிய ஆலயத்துக்கு வெளியே சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளதை புலனாய்வு அமைப்புகள் கண்டுபிடித்துள் ளன எனக் கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜி-20 மாநாட்டின் போது இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமருடன் கருத்துப் பரிமாறிக் கொள்ளப்பட்டது என்றும் கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் கனடா பிரஜையின் கொலையில் வெளிநாட்டு அரசாங்கத்துக்குத் தொடர்புள்ளதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இது எங்கள் இறைமையை மீறும் செயல் என கனடா பிரதமர் பொதுச் சபையில் தெரிவித்துள்ளார்.

கனடா பிரஜையான ஹர்தீப் சிங் நிஜார் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கும் இந்திய முகவர்களுக்கும் தொடர்புள்ளது என்று கிடைத்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகளை கனடாவின் பாதுகாப்புத் தரப்பினர் கடந்த சில வாரங்களாக ஆராய்ந்து வருகின்றனர். எங்கள் அரசாங்கம் குற்றவாளிகளை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் எனவும் கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தக் குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து இந்தியாவின் மூத்த இராஜதந்திரியொருவரை கனடா தனது நாட்டிலிருந்து வெளியேற்றியுள்ளது. கனடா வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜொலி அதை உறுதி செய்துள்ளார்.

கனடாவிலிருந்து வெளியேற்றப்பட்ட இந்திய இராஜதந்திரி அங்குள்ள இந்தியப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)





## மீன் உண்ண ஆசைப்பட்டு உயிருக்குப் போராடும் பெண்

நியூயோர்க், செப்.20

அமெரிக்காவில் கலிபோர்னியாவில் வசிக்கும் லாரா பராசாஸ் என்ற 40 வயதான பெண் ஒருவர் மீன் உண்டதால் கை, கால்களை இழந்து உயிருக்குப் போராடி வருகிறார்.

இவர் உள்ளூரில் உள்ள சந்தைக்குச் சென்று ஒரு வகையான மீனை வாங்கி வந்து வீட்டில் சமைத்து சாப்பிட்ட சிறிது நேரத்தில் அவரது உடலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கை விரல்கள் கறுப்பாக மாறின. பாதங்கள் மற்றும் கீழ் உதடு கறுப்பானது. இதையடுத்து அவர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும். ஆனாலும் அவர் கோமா நிலைக்குச் சென்றார். சிறுநீரகமும் பாதிக்கப்பட்டது.

கை, கால்கள் முற்றிலும் செயல் இழந்துள்ள நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார் லாரா பராசாஸ் என்று அவரது தோழி மெசினா கூறுகின்றார்.

லாரா கிட்டத்தட்ட தன் உயிரை இழந்துவிட்டார். அவருக்கு சுவாசக் கருவி பொருத்தப்பட்டு உள்ளது. கடல் உணவுகளில் பொதுவாக கொடிய பக்றீரியாக்கள் காணப்படும். இந்த உணவுகளை முறையாகத் தயார் செய்து சாப்பிடாவிட்டால் உடலுக்குத் தொந்தரவு கொடுக்கும். சந்தையில் இருந்து வாங்கி வந்த மீனை சரியாக வேக வைக்காமல் அப்படியே சாப்பிட்டதால் இந்த நிலைக்கு ஆளாகியுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார். (ஏ-இ)

# சீக்கியர் கொலைச் சம்பவம்

## ஆழ்ந்த கவலையில் ஆஸி.!

கொழும்பு, செப்.20

கனடாவில் சீக்கிய செயற்பாட்டாளர் ஒருவர் கொல்லப்பட்டமைக்கு இந்திய அரசாங்கமே காரணம் என கனடா தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவுஸ்திரேலியா ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனிவொங்கின் பேச்சாளர் இது தொடர்பாகத் தெரிவித்தபோது,

கனடாவில் சீக்கியச் செயற்பாட்டாளர் கொல்லப்பட்டமையின் பின்னணியில் இந்தியா இருக்கலாம் என வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் அவுஸ்திரேலியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

இந்த விடயம் குறித்து உயர்மட்டத்தில் கரிசனைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவில் உள்ள சமூகத்தினர் சிலருக்கு இந்தத் தகவல் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தும் என்பது தொடர்பாக நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் அசதி உண்டாகும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். உறவினர்களுடன் தொடர்பு கொண்டு பேசி நலம் விசாரிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்வீர்கள்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஆட்கொள்ளும். செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெருமை உண்டாகும். குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளை அல்லது பெண்ணின் உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனாலும் செலவுகள் அதிகரிப்பதால் கடன் வாங்கநேரிடும்.

**மகரம்:** ஆதாயம்உண்டாகும்.எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. இடையூறுகள் விலகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்துகொள்வர். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**மீனம்:** எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அலைச்சல் உண்டாகும்.

# விஜய் அன்ரனியின் மகள் உயிர்மாய்ப்பு





சென்னை, செப்.20

பிரபல இசையமைப்பாளரும், நடிகருமான விஜய் அன்ரனியின் மகள் மீரா தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அவர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும், அதற்கு முன்னதாகவே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சென்னையில் உள்ள தனியார் பாடசாலையில் 12ஆம் தரத்தில் கற்கும் இவர், மன அழுத்தத்தில் இருந்தார் என்றும், அதற்கான சிகிச்சைகளைப் பெற்று வந்தார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சென்னைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அவர்களும் இவர்களும் ஒன்றே!

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மீண்டும் ஒருமுறை அதிருப்தி வெளியிட்டிருக்கின்றது. இலங்கையில் தற்போதும் மனித உரிமை துஷ்பிர யோகங்கள் தொடர்கின்றன என்று அந்த அமைப்பு இடித் துரைத்திருக்கின்றது. இலங்கை அரசாங்கம் தொடர்ச்சி யாகப் பொறுப்புக்கூறலில் இருந்து விலகி வருகின்றது என்பதுவும், சர்வதேச நெருக்கடிகளில் இருந்து தப்பிப் பதற்கான உத்திகளையே செயற்படுத்துகின்றது என்பது வுமே சர்வதேச மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் குற்றச்சாட்டுகளாக இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அபிப் பிராயமும் இதனு டன் ஒத்துப்போகின்றது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்படுவது இதுதான் முதல்முறையுமல்ல.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும், சர்வதேச நாடுகளுக்கும் கடந்தகாலங்களில் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகளின் அனுசர ணையுடன் இலங்கை மீது ஏராளமான தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டபோதும், இலங்கை அரசாங்கங்கள் அவற்றைத் தொடர்ச்சியாக நிராகரித்தே வருகின்றன. ஆனாலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை யும், சர்வதேச நாடுகளும் இலங்கையை இன்னமும் மென்மையாகவே கையாண்டு கொண்டிருக்கின்றன. இந்த விடயத்தை வைத்து தம் தாளத்துக்கு இலங்கையை ஆடவைக்கத்தான் முனைகின்றனவே தவிர, பரிகாரநீ திக்காகவோ, நல்லிணக்கத்துக்காகவோ அவை இதயசுத் தியுடன் செயற்படவில்லை.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஒரு தசாப்த காலம் கடந்துள்ளபோதும், இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் தொடர்பாகவோ, கடந்த காலங்களில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவோ ஆக்க பூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பதாக இல்லை. வழமைபோன்று தற்போது நடந்துவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்விலும் இலங்கை தன்னை நியாயப்படுத்தவே முனைந்துள்ளது. சில கண் துடைப்பு நடவடிக்கைகளைப் பட்டியலிட்டுப் பீற்றிக் கொண்டுள்ளது. இலங்கையின் இந்த ஏமாற்றும் போக்கு சர்வதேச நாடுகளுக்கும் நன்கு தெரியும். இலங்கை விட யங்களைக் கையாளும் வெளிநாட்டுத் தூதுவர்களும், இராஜதந்திரிகளும் அதை ஒப்புக்கொண்டும் இருக்கின் றனர். இலங்கையின் இந்தப் போக்கைக் கட்டுப்படுத் தாது, வெறுமனே அறிக்கைகளில் – காகிதக் கத்திகளாக – அதிருப்தியை வெளிப்படுத்துவதால் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை.

பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்க வேண் டும் என்ற உண்மையான விருப்பு இருக்குமானால், தீர் மானங்களுக்கு மேலதிகமாக சர்வதேசம் இலங்கை மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்க முன்வர வேண்டும். கடந்த காலங்களில் இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களைச் செயற்படுத்துவ தற்கு வற்புறுத்தவேண்டும். ஆனால் அவ்வாறான அழுத் தங்கள் பிரயோகிக்கப்படுகின்றனவா என்ற கேள்வி பாதிக்கப்பட்ட தரப்புகளிடம் இருக்கின்றது. அவ்வா றில்லாமல் எத்தனை தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டாலும், எத்தனை அறிக்கைகள் வெளி வந்தாலும் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், சர்வ தேச நாடுகளும் தங்களின் நலன்சார்ந்து இந்த விடயத் தைக் கையாண்டால், பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத் தவரையில், இலங்கையும், அவர்களும் ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகளே.

### நாளொரு நல்வார்த்தை

சொல்லப்பட்டவுடன் ஒரு வார்த்தை இறந்துவிடுகிறது என்கிறார்கள்; ஆனால் அது அன்றிலிருந்துதான் வாழத் தொடங்குகிறது

– எமிலி டிக்கின்சன்




# நெருக்கடியைச் சமாளிக்கும் செயற்றிட்டம் அரசிடமில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

**கொழும்பு, செப். 20**

**சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் 30 சதவீதம் மாத்தி ரமே நிறைவேற்றப்பட்டுள்ளது. 70 சதவீதமானவற்றை நிறை வேற்ற அரசாங்கம் தவறியுள்ளது. இரண்டாம் கட்ட கடன் தொகை யைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் எழுந்துள்ளதுடன் நாட்டின் பொருளாதாரமும் பெரும் சரிவை எதிர்கொண்டுள்ளது.**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர்திஸ்ஸஅத்தநாயக்கதெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப் பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மூளைசாலிகள் வெளியேறுகின் றமையானது சகல துறைகளிலும் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. மூளைசாலிகளின் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு நட வடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. மறுபுறம் குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன.

மாதமொன்றுக்கு சுமார் 30 கொலைகள் நாட்டில் இடம்பெறுகின்றன. கடந்த வருடத் தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிர் மாய்த்துள்ளனர்.

இவற்றுக்கெல்லாம் பிரதான காரணம் பொரு ளாதார நெருக்கடியாகும்.

நாட்டின் பொருளாதாரம் தற்போதும் பெரும எவில் சரிவை எதிர்கொண்டுள்ளது. வெளி நாட்டுக் கடன்களைத் தொடர்ந்தும் அரசாங்கம் மீளச் செலுத்தாதுவிடின் கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளமுடியாது. -என்றார்.

(ச-இ)

# தடை செய்யப்பட்ட அமைப்பை நினைவுகூர அனுமதிக்கமுடியாது

## விமல் வீரவன்ஸ கொதிப்பு

கொழும்பு. செப். 20

புலிப் பயங்கரவாதியான திலீபனை நினைவு கூர்ந்து திருகோணமலைக்கு வாகனப் பேர ணியில் சென்றுள்ளமையானது இனப்பிரச் சினையைத் தோற்றுவிக்கும் செயற்பாடே - இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். அவர்மேலும்கூறியதாவது: திலீபன் ஒரு புலிப் பயங்கரவாதி. புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். அந்த அமைப்புக்காக உயிரிழந்தவரை எவ ரும் நினைவுகூர முடியாது.

கொழும்பில் கறுப்பு ஜூலை நினைவுகூரப் பட்டது. ஆனால், பிக்குகள் கொல்லப்பட்ட தையோ பொலிஸார் கொல்லப்பட்டதையோ நினைவுகூரவில்லை. தடைசெய்யப்பட்ட அமைப்புக்காக உயிரிழந்தவரைச் சட்டத்தின் பிரகாரம் நினைவுகூர முடியாது - என்றார்.

(ச-44)

**நாளை** 21.09.2023 வியாழக்கிழமை புரட்டாதி 04

சுபநேரம் : 07.32 – 09.02
ராகுகாலம் : 01.32 – 03.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை வெளிப்படுத்த வேண்டும் அரசு!

## வலியுறுத்துகின்றது எதிர்க்கட்சி

**கொழும்பு, செப்.20**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக் குழு முன்வைத்துள்ள அறிக்கையின் சில பாகங்கள் மறைக்கப்பட்டுவருகின்றன. எதிர்க்கட்சி தலைவருக்குக்கூட அவற்றை வழங்குவதற்கு அரசு கட்டுப்பாடுகளை விதிக்கின்றது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சஜித் தெரிவித்தவை வருமாறு:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் இரண்டாம் தொகுதியின் இரண்டாம் மற்றும் மூன்றாம் பாகங்களை பரிசீலனைக்காக கோரிய போதிலும், அந்தக் கோரிக்கை புறக்க ணிக்கப்பட் டுள்ளது.

இது விடயத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் காலத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளையே தற்போதைய அரசும் நடைமுறைப்படுத்தி, எதிர்க்கட்சித் தலைவருக்குக் கூட அந்தப் பகுதிகளை பரிசீலிக்க வாய்ப்பு வழங்க மறுத்துள்ளது. இதன்மூலம் எனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

பெரும் கொலைகளும் அனர்த்தங்களும் இடம்பெற்று உயிர்கள் பலியாகிய நிலையில் உண்மையான யதார்த்தத்தை நாட்டில் உள்ள மக்கள் அறிய முடியாதுள்ளனர்.

நாடாளுமன்ற பொதுச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் அந்த ஆவணங்களை அனுகலாம் என்று கூறுவது நியாயமற்றது. சாட்சியக் குறிப்புகள் மற்றும் சாட்சியங்களை மக்கள் பிரதிநிதிகளிடம் மறைக்காமல் உண்மையை வெளிப்படுத்த வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட கைகளில் இரத்தம் தோய்ந்தவர்கள் தான் இவ்வாறு மறைப்பவர்கள் என்று தெரியவரும்.

கோத்தாபய அரசு வழங்கிய கட்டளைகளை இந்த அரசும் நடைமுறைப்படுத்துவது தவறு.

இந்த அறிக்கைகள் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்- என்றார். (எ-44)

# ஜே.ஆர். முன்மாதிரி

## முன்னாள் சபாநாயகர் புகழாரம்

கொழும்பு, செப்.20

நாட்டில் இயங்கும் பொது நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படவேண்டும் என்றும், அரச நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன கருதினார். தற்போதைய அரசியல் தலைவர்களுக்கு ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒரு சிறந்த முன்மாதிரி.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் 117 ஆவது பிறந்த தினத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதே அவரது நோக்கமாக இருந்தது. இந்தக் கூட்டு முயற்சிகளால்தான் இன்று சீனா பொருளாதார ரீதியாக வலுவாக உள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஒரு முடிவை எடுத்தால், அந்த முடிவை மாற்றமாட்டார். அதை மாற்றினால், அது மக்கள் நல ஆட்சியை உருவாக்க மட்டுமே செய்யப்பட்டது. அவருடைய ஆட்சியின் போது அவருடன் ஒரு நல்ல இளைஞர் கூட்டம் இருந்தது. இளைஞர்களுக்கு வாய்ப்பையும் அதிகாரத்தையும் கொடுத்தார்.

தற்போதைய அரசியல் தலைவர்களுக்கு ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒரு சிறந்த முன்மாதிரி - என்றார். (எ-இ)

# கடலரிப்பைத் தடுக்கக்கோரி சாய்ந்தமருதில் போராட்டம்

கொழும்பு, செப்.20

நீண்ட காலமாக இடம்பெற்று வரும் கடலரிப்புக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்று கோரி சாய்ந்தமருது பகுதியில் நேற்றுமுன்தினம் வீதியை மறித்து மீனவர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

கடலரிப்புக் காரணமாக மீனவர்களின் ஓய்வு அறைகள், வாடிகள் உள்ளிட்ட கட்டங்கள் சேதமடைந் துள்ளதுடன், படகுகள், வலைகளும் கடலரிப்பால் கடலுக்குள் இழுத்துச்செல்லப்படுகின்றன என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடலரிப்பைத் தடுப்பதற்காக கரையோரம் பேணல் திணைக்களம் கற்களைக் குவித்துள்ள போதிலும், அதில் தமது படகுகள் மோதி சேதமடைகின்றன என்று மீனவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்தநிலையில், போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு பிரவேசித்த சாய்ந்தமருது பொலிஸார், கரையோரம் பேணல் திணைக்களத்தி னர் மற்றும் மீனவர்களுடன் பேச்சில் ஈடுபட்டதை அடுத்து, போராட்டம் கைவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# வாகன விலைகள் மீளவும் அதிகரிப்பு

கொழும்பு, செப்.20

உள்நாட்டுச் சந்தையில் வாகனங்களின் விலை மேலும் அதிகரித்துள்ளது. கார்களின் விலை கடந்த மாதத்தைவிட கணிசமாக உயர்ந்துள்ளது என்று வாகன இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதித்துள்ளபோதிலும், தனியார் வாகனங்களின் இறக்குமதிக்கு அனுமதி அளிக்கப்படாமையால் மீண்டும் வாகனங்களின் விலைகள் உயர்வடைந்து வருகின்றன என்று வாகன இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர். இந்தநிலைமை தொடருமானால் வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த மாதம் முதல் சில பொருள்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தியுள்ளது. ஆயினும் வாகனங்கள் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் கடந்த இரண்டு வருடங்களாக நடைமுறையில் உள்ளது. தற்போது பொதுப்போக்குவரத்துக்கான வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. (எ-இ)

# பணத் தூயதாக்கல் வாய்ப்புகள் இலங்கையில் நடுத்தர அளவில்!

## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, செப்.20

இலங்கையில் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு நிதியளித்தல் என்பவற்றுக்கான சாத்தியப்பாடு நடுத்தர அளவில் காணப்படுகின்றது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார்துறை பங்குதாரர்களுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி 2021/2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு நிதியளித்தல் என்பன தொடர்பில் காணப்பட்ட இடர்நேர்வு தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது இலங்கையில் பதிவான பணம் தூயதாக்கல் முறைமைகள், பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு நிதியளித்தல், இவ்வாறான செயற்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகள், இத்தகைய செயற்பாடுகளுக்கான இடர்நேர்வுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இந்த மதிப்பீட்டின்படி போதைப்பொருள் கடத்தல், இலஞ்சம் மற்றும் ஊழல், வர்த்தக அடிப்படையிலான உட்பாய்ச்சல்கள் என்பன உள்ளடங்கலாக சுங்கத்துடன் தொடர்புடைய பல குற்றங்கள் பணம் தூயதாக்கலுக்குப் பங்களிப்புச் செய்வதாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அவற்றுக்கு மேலதிகமாக மோசடிகள், கொள்ளை, சூழல் மற்றும் இயற்கை வளங்கள் சார்ந்த குற்றங்கள், ஆட்கடத்தல், வரிக் குற்றங்கள், சட்டவிரோத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத கடற்றொழில் என்பனவும் பணம் தூயதாக்கலுடன் தொடர்புபட்டுள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளன.

இந்த மதிப்பீட்டை அடிப்படையாகக்கொண்டு, நாட்டில் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு நிதியளித்தல் ஆகியவற்றுக்கு எதிரான தேசியக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வாறான நடவடிக்கைகளை முறியடிப்ப தற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

# நிர்மாணத்துறை பின்னடைவை தவிர்ப்பதற்கு முன்மொழிவுகள்!

கொழும்பு, செப்.20

கட்டட நிர்மாணத் தொழிற்றுறையில் ஏற்படும் பின்னடைவைத் தவிர்ப்பதற்கு அவசியமான 13 முன்மொழிவுகள் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த தெரிவித்துள்ளார்.

நிர்மாணத்துறை தொடர்பில் ஆராய அமைச்சுக்களின் செயலாளர்கள் தலைமையில் ஆறு குழுக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்தார். அந்தக் குழுக்களின் மூலம் யோசனைகள் கோரப்பட்டிருந்த நிலையில், அதற்காக 50 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் 13 அவசர முன்மொழிவுகள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தில், நிர்மாணத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அறிக்கை விடுவதை விடுத்து ஐ.நா. காத்திரமாகச் செயற்பட வேண்டும்!

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

ழ்ப்பாணம், செப். 20

**ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கெதிராக முன்வைக்கப்படும் அறிக்கைகள் காட்டமாகக் காணப்பட்டாலும் அதனை இலங்கை அரசாங்கம், ஏமாற்றும் நிலை தொடர்ந்து காணப்படுவதால் ஐக்கிய நாடுகள்சபை மீதான நம்பிக்கை தமிழ்மக்களுக்கு குறைவடைந்து வருகின்றது.**

ஐக்கிய நாடுகள்சபை அறிக்கைகளை வெளியிடுவதை நிறுத்தி விட்டு காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

- இவ்வாறு மன்னாரில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஐ.நா. சபையிலே தீர்மானங்கள் வருகின்றபோதெல்லாம் இலங்கை அரசாங்கம் ஐ.நா. சபையை ஏமாற்றுகின்ற வகையிலே காலங் கடத்துகிறது.

ஐ.நா. சபையும் அவர்களுக்கு வாய்ப்பை வழங்கும் விதமாகவே நடந்துகொள்கின்றது.

இதனால் தமிழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகள்சபையின் மீதான நம்பிக்கை குறைந்து வருகிறது.

சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு மனித உரிமை மீறல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதும் எமது மக்களின் கோரிக்கையாகும்.

ஐக்கிய நாடுகள்சபை வலுவான அல்லது ஆக்கபூர்வமான தீர்மானங்களைக் கொண்டு வந்து இலங்கை அரசாங்கத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எனவே தொடர்ச்சியாக ஐக்கிய நாடுகள்சபை அறிக்கைகளை வெளியிடுவதை நிறுத்திவிட்டு அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் - என்றார். (ச-27)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், செப்.20

தியாகதீபம் திலீபனின் நினைவுதினத்தை முன்னிட்டு எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பபீடத்தில் காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை முன்னெடுக்கபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-125)



தியாகதீபம் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "எமக்காக தன்னுயிர் தந்தவனை நினைவேந்தி ஒரு துளி" எனும் தொனிப்பொருளில் குருதிக் கொடை யாழ். பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் அமைந்துள்ள மாணவர் கட்டடத் தொகுதியில் இடம் பெற்றது. (ய-125)

## நீர்வேலி பிள்ளையார் கொடியேற்றம் நேற்று

யாழ்ப்பாணம், செப். 20

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. 30 ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ச-17)



மயிலத்தமடு மேய்ச்சல் தரவை அபகரிப்பு

# கொட்டும் மழையிலும் தொடரும் போராட்டம்!

மட்டக்களப்பு, செப். 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான கால்நடைகளின் மேய்ச்சல் தரவையான மயிலத்தமடு பகுதி சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டு வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை கண்டித்து சுழற்சி முறையிலான போராட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொட்டும் மழையிலும் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் முகமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் போராட்டக்களத்துக்குச் சென்று கால்நடைவளர்ப்பாளர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டச் செயலருடன் அலைபேசியூடாகத் தொடர்புகொண்டு இந்த விடயம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கால்நடை வளர்ப்பாளர்களிடம் தெரிவித்தார். வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் சட்டரீதியற்ற முறையில் காடழிப்பு, விவசாய நடவடிக்கை போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த பூரண தகவல் எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் கிடைக்கப் பெறும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்திருந்தார். (ச-இ)

## 'பட்டா' மீது தாக்குதல் 3 இளைஞர்கள் கைது



யாழ்ப்பாணம்,செப். 20

ஆனைக்கோட்டைப் பகுதியில் 'பட்டா' ரக வாகனத்தைத் தாக்கி, வாகனச் சாரதிக்கு காயமேற்படுத்திய குற்றச்சாட்டில் 3 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஆனைக்கோட்டை- உயரப்புலம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த வாகனச் சாரதி யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட மானிப்பாய் பொலிஸார் கல்வியங்காடு மற்றும் மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த மூவரைக் கைதுசெய்தனர். சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

## பூநகரி உணவகங்களில் திடீர்ப் பரிசோதனைகள்!

கிளிநொச்சி - பூநகரியிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரால் திடீர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் இந்தத் திடீர்ச் சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது சுகாதாரப் பாதுகாப்பின்றி விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டதுடன் விரைந்து சீர்திருத்துவதற்கு காலவரையறைகளும் அளிக்கப்பட்டன. உணவு கையாளும் ஊழியர்கள் தற்சுகாதாரம் மற்றும் உணவகங்களின் இறுதிக் கழிவகற்றல் போன்றவற்றை சரியாகக் கடைப்பிடிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டதுடன் உணவுச்சுகாதாரத்தைக் கேள்விக்குறியாக்குபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டது. (ச-9)

தேசிய பளுதூக்கல் போட்டி

## பரு. இந்து மகளிர் வெண்கலம் வென்றது



யாழ்ப்பாணம், செப். 20

தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவி பாஸ்கரன் கயல்விழி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

அகில இலங்கைப் பாடசாலை ரீதியிலான பளுதூக்கல் போட்டிகள் பொலநறுவை ராஜகிரிய வித்தியாலயத்தில் கடந்த 16, 17, 18 ஆகிய நாள்களில் நடைபெற்றன.

இதில் 55 கிலோ எடை தூக்கல் பிரிவில் பங்கேற்ற வட இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த பாஸ்கரன் கயல்விழி வெற்றியீட்டி வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கியுள்ளார். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மின்சாரசபை மறுசீரமைப்பு:

# விசேட கொடுப்பனவு 'கட்' பணியாளர்கள் மட்டுப்பாடு

**கொழும்பு, செப். 20**

**எதிர்வரும் 2024ஆம் ஆண்டு மின்சார சபை ஊழியர்களுக்கு பயன்படுத்தப்படாத விடுமுறைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட மாட்டாது என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜய சேகர தெரிவித்துள்ளார்.**

மின்சாரசபையின் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் அண்மையில் மேற்கொண்ட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கை மின்சாரசபையில் பணியாற்றும் ஊழியர்களின் சேவைத்திறன் தொடர்பில் சிக்கல்கள் இருக்கின்றன. அதன்காரணமாக மின்சாரசபை மறுசீரமைப் பின்போது 24 ஆயிரம் ஊழியர்களையும் குறைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கலந்துரையாடலில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், "மின்சார சபையில் பணப்பற்றாக்குறை ஏற்படுவதற்கு காரணம் ஊழியர்களின் தவறு அல்ல, சம்பந்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் நடவடிக்கைகளே காரணம்" என்று தெரிவித்தனர்.

இதேவேளை, மின்சாரசபை மறுசீரமைப்பு சட்டவரைவை எதிர்வரும் 24ஆம் திகதி அமைச்சரவையின் ஒப்புதலுக்கு எரிசக்தி அமைச்சர் அனுப்பவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24.02.1944 மறைவு 30.09.2022



அமரர் அருணாசலம் பேரம்பலம்
காடிவளை இளவாலை
திதி: 20.09.2023 புதன்கிழமை

எங்கள் குடும்ப விளக்கு
எமை விட்டுப் பிரிந்து ஓராண்டானதோ!
இப்போதும் எம் நெஞ்சில் வாழும்
எமதருமை நாயகனே!
எப்போது காண்போம் உம்மை
உழைப்பினால் உயர்ந்து
உலகம் பாராட்ட வாழ்ந்து - எம்மை
உயர வாழ வைத்து - நீர்
வானுறையும் தெய்வத்தினுள் கலந்தீர்
உம்மை மறக்கமுடியாது தவிக்கின்றோம்
எம் வாழ்நாள் முழுவதும்
உமை அஞ்சலிப்போம்.

ஓம் சாந்தி சாந்தி !! சாந்தி !!!

அன்னாரின் ஓராண்டு நினைவுகளை சுமந்து ஆத்மா சாந்தி பெற இறைவனை துதிக்கின்றோம்.

காடிவளை இளவாலை 20.09.2023

குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.


## எம்.பி. மீது துப்பாக்கிச்சூடு; குற்றவாளிகளைக் கண்டறிக

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 20

நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும். தொடர்புடைய அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உத்திக பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்.

குற்றவாளிகளை விரைவில் கண்டறிந்து அவர்களுக்கு சட்டத்தின் பிரகாரம் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிப்படையான விசாரணை அவசியம்- என்றார். (ச-44)

## பாடசாலையிலிருந்து வெடிபொருள் மீட்பு!

கொழும்பு, செப். 20

மாத்தறையிலுள்ள பாடசாலையொன்றின் மேற்கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வெடிபொருள்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் வெடிபொருள்கள் என்பனவே இதன்போது மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## மஞ்சள் காமாலை தடுப்பூசி அடுத்த வாரம் இறக்குமதி

கொழும்பு, செப். 20

மஞ்சள் காமாலை நோய்க்கான 2 ஆயிரம் தடுப்பூசிகள் அடுத்த வாரம், நாட்டுக்கு கிடைக்கப்பெறும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவர் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

மஞ்சள் காமாலை நோய்க்கான தடுப்பூசிகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவிவந்தது.


இதன்காரணமாக கடந்த காலத்தில் சுகாதார அமைச்சு மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

குறித்த தடுப்பூசியைக் கொள்வனவு செய்யும் இறக்குமதியாளர்கள் ஒரு சிலரே உள்ளமையால் குறித்த தடுப்பூசிக்கான தட்டுப்பாடு காணப்பட்டது.

இந்தநிலையில் யுனிசெப் அமைப்பின் உதவியுடன், விரைவில் குறித்த தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கப்பெறும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தி இலங்கையை வலுவாக்க ஆதரவு

### தென்கொரிய ஜனாதிபதி ரணிலிடம் தெரிவிப்பு



கொழும்பு, செப். 20

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்றிட்டத்துக்கு வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தி ஆதரவு வழங்குவோம் என்று தென்கொரியா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான தென்கொரிய நிரந்தர வதிவிட தூதுக்குழு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை - தென்கொரியாவுக்கு இடையில் வர்த்தக மற்றும் முதலீட்டுத் தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இரு தலைவர்களும் அவதானம் செலுத்தியிருந்தனர்.

விரைவில் இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தக ஒப்பந்தத்தை கைச்சாத்திட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

தற்போது இலங்கையின் இளையோர் தென்கொரியாவில் தொழில் புரிகின்றனர் என்பதோடு, அந்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றமைக்காக தென்கொரிய ஜனாதிபதி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும் எதிர்காலத்தில் இலங்கை இளைஞர் - யுவதிகளுக்கு தென்கொரியாவில் பல புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்க இரு நாடுகளுக்கும் இடையில் விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்திட எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் காலநிலை மாற்றம் குறித்து இரு நாடுகளிடையேயும் ஒப்பந்தத்தை விரைவில் கைச்சாத்திட்டு இலங்கையுடன் நெருக்கமாகச் செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் சுட்டிக்காட்டினார். இலங்கை எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளக்கட்டியெழுப்பும் செயற்றிட்டத்துக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சொக்கலிங்கம் லோஜினி
ஊடக கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

# புதன் பொய்கை



**"செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து." -வள்ளுவர்**

# சமூக ஊடகம் ஒரு போதைப்பொருளா?



ஒரு நாட்டின் சக்தியும் உறுதியும் அந்நாட்டின் எழுச்சிமிக்க இளைய தலைமுறையின் கைகளிலேயே தங்கியுள்ளது. அநீதிகளுக்கெதிராகத் துடித்தெழும் இரத்தத்தின் மறு பெயர்தான் இளமை. இனிமையும் கனவுகளும் கொண்ட இளமைப்பருவம் வாழ்க்கைப் புத்தகத்தின் வித்தியாசமான ஒரு பக்கம். சமூகத்தின் முதுகெலும்புகளான இளைஞர்களின் பாதுகாப்பும் மேலாண்மையுமே சமூகத்தைக் காக்கும் அரண்களாகும். ஆனால் இன்று அந்த அரண்களையே அசைக்கும் மாற்றங்கள், அந்த இளையோர் அறியா வண்ணம் ஏற்படத் தொடங்கிவிட்டன. வெவ்வேறு வகையிலான சவால்கள் இன்றைய இளையசமூகத்தை சுற்றிவளைத்து, அவர்களின் ஆளுமைகளைச் சிதைக்கத் தொடங்கிவிட்டன.

இளைஞர்கள் இன்று எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகளில் மிகமுக்கியமானதாக சமூக வலைத்தள ஆக்கிரமிப்பு மாறியுள்ளது . உலகத்தையே உள்ளங்கைக்குள் சுருட்டி வைக்கும் ஊடகங்களின் அபரிமிதமான வளர்ச்சி, சிலசமயங்களில் ஆக்கத்தை விட அழிவுக்கே துணைபோகும் அவலநிலையை சமூக வலைத்தளங்களில் அவதானிக்கமுடியும். இளையோரின் மனதிலுள்ள உணர்கவுளைத் தூண்டி அதில் குளிர்காயும் வேலையையே சமகால சமூக ஊடகங்கள் அதிகளவில் முன்னெடுக்கின்றன. அறிவையும் அன்பையும் மனிதப் பண்பாடுகளையும் வளர்க்க வேண்டிய சமூக ஊடகங்களே இப்போது கலாசாரச் சீரழிவு, வன்முறை வாழ்வியல், போதைப்பொருள் பழக்கம் போன்ற தவறான பாதைகளில் இளையோரை திசைதிருப்ப முயல்கின்றன.

இன்றைய உலகத்தில், இளைஞர்கள் தவறான பாதைக்குச் செல்ல பல வாய்ப்புகள் உள்ளன. ஆனாலும், தொழில்நுட்ப சாதனங்களின் அபார வளர்ச்சியினால் அவர்களின் கைகளில் எளிதில் கிடைக்கக்கூடியவை அலைபேசிகளும், அதன் வழியான கட்டற்ற இணைய உலகமும் தான். வட்ஸப் முதல் ரிக்ரொக் வரையான சமூக ஊடகங்கள் வெளிப்பூச்சுக்கு மகிழ்வூட்டல், நட்பிணைப்பு, துரித கருத்து வெளிப்பாடு என்ற விடயங்களை முதன்மைப்படுத்தினாலும், அவை தமது வியாபார நோக்கத்துக்காக இளைஞர்களையும், யுவதிகளையும் தீயபழக்கங்களுக்குப் பலிகொடுக்கும் கைங்கரியத்தையே அதிகளவில் செய்கின்றன.

உலகின் நல்லது, கெட்டது அனைத்தும் உள்ளங்கையில் அலைபேசி ரூபத்தில் உள்ளது. சமூக ஊடகங்கள் இன்றைய இளைஞர்களின் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் நிச்சயமாகப் பாதிக்கின்றன. அதேவேளை, சமூக ஊடகங்களை நல்லவிதமாக உபயோகித்து பயன்பெறும் இளைஞர்களும் இருக்கவே செய்கின்றனர். சிலர் தமது சமூக ஊடகப் பிரபலத்தை அடிப்படையாகக் கொண்டு, வறுமையில் இருப்போரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் சமூகப் பணிகளையும் செய்கின்றனர். 'அரபு வசந்தம் ' எனப்படும் மக்கள் புரட்சிக்கும் சமூக ஊடகங்களே உதவின. நம்நாட்டில் நடந்த 'அரகலய' என்ற மக்கள் எழுச்சியும் சமூக ஊடகங்கள் வாயிலாகவே நிகழ்ந்தன. ஆனால் எந்தளவுக்கு இவை நன்மை பயக்கின்றனவோ, அதைவிட பலமடங்கு தீமையெனும் புதைகுழிக்குள் இந்தச் சமூக ஊடகங்கள் இளைய சமுதாயத்தை தள்ளிவிடுகின்றன.

சமூக ஊடகங்களில் நாம் நமது கருத்துச் சுதந்திரத்தை துணிச்சலோடு வெளிப்படுத்தலாம். நமக்குத்தேவையான தகவல்களைப் பெறமுடியும் மற்றும் தற்போது பல தகவல்கள் உடனுக்குடன் பெறவும் முடிவும். நல்ல பல கருத்துகள் - நல்ல பல செய்திகள் - நல்ல பல தகவல்கள் - நம் கொள்கை சார்ந்த விடயங்கள் என்பவற்றை உலக மயமாக்கி, அதனை எல்லோரிடமும் பகிர்ந்துகொள்வதற்கும் மிகப்பெரிய கருவி சமூக ஊடகம் . 'அரகலய' போன்ற போராட்டத்தினூடாக ஒரு நாட்டின் ஆட்சியைக் கூட இந்தச்சமூக ஊடகங்களால் மாற்ற முடியும். நிகழ்நிலைக் கல்வி, இணையவழி வியாபாரம் என்பனவும் புதிய உலகின் கதவுகளை அகலத் திறந்துள்ளன.

ஆனால் கட்டற்ற பாலியல் கலாசாரம், ஒழுக்கக்கேடுகள், போதைப்பொருள்களைப் பெறும் முறைகள், போதைக்கும்பலோடு தொடர்பை உண்டாக்குதல், தற்கொலைக்குத் தூண்டுதல் . இணையவழி மோசடிகள் என இருண்டயுகமொன்றை நோக்கி இதே சமூக ஊடகங்கள் அழைத்துச் செல்லவும் தவறவில்லை.

வாசிப்புப் பழக்கத்தை டிஜிட்டல் மயமாக்கிய சமூக ஊடகங்கள் மெல்லமெல்ல தமக்கே எல்லோரும் அடிமையாகும் நிலையை உருவாக்குகின்றன.

சமூக ஊடகங்களுக்கு அடிமையாகும் போது கல்விக்கு ஒதுக்கப்படும் நேரமும், கல்வியின் மீதுள்ள ஆர்வமும் இழக்கப்படுகின்றன. உளவியல் சம்பந்தமான பிரச்சினைகளான மனச்சோர்வு , நினைவாற்றல் சக்தி, கவனிக்கும் ஆற்றல் போன்றவற்றை சமூக ஊடகங்கள் சீர்குலைக்கின்றன.

சமூக ஊடகங்களைத் தொடர்ந்தும் பயன்படுத்துவது ஒரு வகையான போதை நிலையினை ஏற்படுத்தும். குறிப்பாக இளம் வயதுடையவர்கள் பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்ததில் இருந்து படுக்கைக்குச் செல்லும் வரை படிக்கும்போதும், உணவு உண்ணும் போதும், மற்றவர்களுடன் உரையாடும் போதும், அவ்வளவு ஏன் கழிவறைக்குச் செல்லும் போது கூட அலைபேசி வழியே சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். முன்னரெல்லாம், இளைஞர்கள் வெளியே சென்று தங்கள் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த நிலை முற்றிலும் மாறி, நண்பர்களுடன் பேசுவது, கோபப்படுவது எல்லாம்'ஒன்லைனில்' என்றாகிவிட்டது. எதிர்கால சமுதாயத்தைச்சமாளிக்க இளைஞர்களுக்கு தேவையான சமூகத் திறன்களை வளர்க்க இது ஒரு தடையாகும். சக மனிதர்களுடன் நேருக்கு நேர் பேசுவது எப்படி, ஒரு உறவை எவ்வாறு உருவாக்குவது, பேசும்போது முகபாவனைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது, உடல் மொழி மற்றும் இவ்வாறு பல விடயங்களை அறிந்துகொள்ளாத தலைமுறையாக இன்றைய இளையோர் வளரப்போகிறார்கள். சமூக ஊடகங்களில் ஒரு பொத்தானை அழுக்குவதன் மூலம் பிடிக்காதவர்களை நீக்கிவிட்டுக் கடந்துவிடலாம். ஆனால் சமூகத்தில் நேருக்கு நேராக வரும் பிரச்சினைகளைக் கையாளும் போது இதேவழிமுறையைக் கைக்கொள்ளமுடியாதே. பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பதென்ற அனுபவம் இல்லாததாலேயே இன்று சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் பெரும்பாலான இளைஞர்கள் சிறு பிரச்சினைக்கும் உயிர்மாய்த்தல் என்ற தவறான முடிவை எடுக்கிறார்கள்.

இளைஞர்களில் சுமார் 90% பேர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக, சமூக ஊடகங்கள் ஏற்படுத்தும் விளைவுகளால் பாதிக்கப்படும் ஆபத்தில் குறிப்பாக இளைஞர்கள் உள்ளனர். யூடியூப், இன்ஸ்டாகிராம், ஸ்னாப்சட், பேஸ்புக், ருவிற்றர் ஆகிய சமூகவலைத்தளங்கள் இளையோரின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா என்ற தலைப்பில் பல கேள்விகளை இணையக் கருத்துக் கணிப்பு ஒன்று பி.பி.ஸி.யினால் நடத்தப்பட்டது. அதன்போது பெரும்பாலானோர் இந்த சமூக ஊடகங்களால் ஆரோக்கியமிழந்து, மனநிலையும் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறிப்பட்டது.

இளமைப் பருவம் என்பது மிகவும் துடிதுடிப்பான பருவம் நாம் எதை முயற்சி செய்தாலும் அதனைச் சாதிக்க வேண்டும் என்ற முயற்சியோடு நகரும் பருவம் எனவே இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் என்ற நிலையில் இளைஞர்களின் பங்கானது இன்று மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. ஏனெனில் இன்றைய உலகில் உலாவிக் கொண்டிருக்கும் சமூக ஊடகங்கள் இவை உலகிற்கு கிடைத்த சாபமா? அல்லது வரமா? என்பது கேள்விக்குறியான வினாவாகும் இந்த ஊடகங்களைப் பயன்படுத்தும் நாம் அவ் ஊடகங்களின் ஊடாக வெளியிடப்படும் தகவல்களை எமது சாபமாக்கிக் கொள்வதும் எமக்கு வரமாக்கிக் கொள்வதும் அதனை பயன்படுத்தும் எமது கைகளிலேயே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணாகம் மெய்கண்டானின் தோற்றத்தில் தவிர்க்க முடியாத ஆளுமை மு.கந்தையா

இரத்தினம் சுப்பிரமணியம்,
ஓய்வுபெற்ற ஆசிரியர்



'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க தி.மு.கந்தையா ஈழ நாட்டின் வடபாலமைந்த பண்ணாகம் என்னும் சிறிய கிராமத்தில் 18ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் வழக்கம்பரையின் வடக்கு வீதியில் மரவியாபாரம் நடத்திவந்த தில்லையம்பலம் முருகேசு தம்பதியினரின் 4ஆம் புத்திரராக 1894இல் பிறந்தார்.

அக்காலத்தில் பண்ணாகத்தில் சிறுவர்கள் கற்கும் பள்ளிகள் முறையாக அமையவில்லை. இது பெருங்குறையாக இருந்து வந்தது. இதனால், மு.கந்தையா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தன் ஆரம்ப வகுப்புக்களைக் கற்றுவந்தார். பண்ணாகம், தொல்புரம், மூளாய், பொன்னாலை, சித்தங்கேணி போன்ற அயற்கிராமத்துப் பிள்ளைகளும் அங்கே கல்வி கற்றனர். சிறுவயதிலே நற்குண நற்பழக்க வழக்கம், ஒழுக்கம் கல்வியிலும் பிறவேலைகளிலும் தன்னுடைய திறமைகளை வெளிக்காட்டி நின்ற கந்தையாவுக்கு இப்பள்ளியும் பெரியாரது அரவணைப்பும் வரப்பிரசாதமாக அமைந்தன. பரோபகாரக் கருணை, பிறருக்கு உற்றவிடத்து உதவிகள் புரியும் குணங்கள் மேலோங்க சக மாணவர்களோடு அன்போடும் பண்போடும் திகழ்ந்தார். விளையாட்டுத் துறையிலே தட, கள விளையாட்டுக்களில் முன்னிலை வகித்து வந்தார். இது வெறும் புனைகதையன்று. கந்தையா தீமைகண்டு பொங்குவார். ஆனால் தீயவர்களை வெறுப்பதில்லை. தீமையைச் செய்வர் முன்னிலையிலேயே கண்டிப்பார். அவர் செய்த தீமையைப் பிறர்க்குத் திரித்துச் சொல்லமாட்டார். இளம் வயதிலேயே சான்றோனாக வாழ்ந்தார்.

**'கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு'** என்ற திருக்குறளுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தார். அவரோடொத்த வயதுடையவர்கள் அவரில் மிகுந்த அன்பு பாராட்டி மரியாதை செய்தனர். காரணம் அவரின் தூய்மையான ஒழுக்கமும் கொள்கை உறுதியுமேயாம். மலேசியாவில் உத்தியோகம் பார்க்கும் காலத்திலும் மிகவும் எளிமையாகவே வாழ்ந்தார்.

### காந்திய ஈர்ப்பு

இந்தியாவில் காந்தியடிகளின் சுதந்திரவேள்வி மற்றைய அயல் நாடுகளான மலேசியா, இலங்கை போன்ற நாடுகளிலும் பரவியது. கந்தையா அவர்கள் காந்தியடிகளின் கொள்கையால் ஈர்க்கப்பட்டார். எந்த வேளையிலும் சுறுசுறுப்பாக ஏதாவதொரு கருமம் செய்து கொண்டேயிருப்பார். மனத்தின் சுறுசுறுப்பை அவருடைய விறுவிறுப்பான நடை புலப்படுத்தும்.

அவர் மலேசியாவில் உத்தியோகம் பார்த்த காலத்தில் அங்கே உத்தியோகம் பார்த்த இளைஞர் பலரைக் கூட்டி, பண்ணாகத்தில் ஒரு சைவப் பாடசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். எல்லாரும் சம்மதம் தெரிவித்தனர். அவர்களிடம் உதவி பெற்றுக்கொண்டு ஊருக்கு வந்தார். 1925ஆம் ஆண்டு முற்பகுதியில் இங்கே வந்து, ஊரவர்களிடம் பனைமரங்கள் கேட்டுப்பெற்று தமக்குச் சொந்தமான (இப்போது பாடசாலையிருக்கும் நிலத்துக்குக் கிழக்கேயுள்ள) நிலத்தில் தற்காலிகமாக ஒரு கொட்டகை அமைத்தார்.

பண்ணாகத்தில் புதிதாக ஏடு தொடக்க வேண்டிய பிள்ளைகளை ஒன்றிணைத்து 1925ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி பாடசாலையைத் தொடங்கினார். திண்ணையில் பாயிலேயே அமர்ந்து படித்தனர். அவ்வாறு படித்தவர்கள் நாலு ஐந்து பிள்ளைகள் தான். பின்னர் சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையில் கற்ற மாணவர்களின் பெற்றோருடன் கதைத்து அவர்களுக்கு சைவப் பாடசாலையின் அவசியத்தை உணர்த்தி மாணவர் தொகையை மூன்று மாதத்தில் 65 பிள்ளைகளாக அதிகரித்தார். அப்போது கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் படித்து வெளிவந்த கரணவாய் வே.முருகேசு என்ற இளைஞர் தலைமையாசிரியராக நியமிக்கப்பெற்றார். சிவபாதசுந்தரனாரின் ஆலோசனைப்படி பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையென்று பெயரிடப்பட்டது. பாடசாலையை நிர்வகிக்கும் பொறுப்பை இ.மாதவரிடம் ஒப்படைத்தார். அவர் 1932ஆம் ஆண்டு வரையும் உள்ளூர் முகாமையாளராகக் கடமை புரிந்து பாடசாலையை நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தார்.

கந்தையா பாடசாலைக்கு நிரந்தரமான கட்டம் கட்டுவதற்காக இவ்வூர்ப் பெரியவர்களிடம் பணம் சேர்த்தார். கட்டவசதியான நிலம் இல்லாதபடியால் அப்போதிருந்தபெரியார் சி.சோமநாதரிடம் 3 பரப்பு நிலம் தருமசாதனமாகப் பெற்று இப்போதுள்ள பாடசாலைப் பெரிய மண்டபம் கட்டப்பட்டது. இந்தக் கட்டடத்துக்கான மாதிரி வரைபடம் மலேசியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது. அதனை முன்னின்று கட்டுவித்தவர்கள் இ.மாதவர், இ.மாணிக்கம், சி.அப்பாப்பிள்ளை என்போர் ஆவர். புதிய கட்டடத்துக்கு அத்திபாரம் 1928ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் வை.துரைசுவாமி, சு.சிவபாதசுந்தரம் என்போரால் இடப்பட்டது.

பாடசாலையை 8 மாதங்கள் நடத்துவதற்கு மலேசியாவிலுள்ள பெரியார்கள் பணஉதவி வழங்கினார்கள். அரசினர் நன்கொடை பெறுவதற்காகப் பாடசாலை சைவ வித்யா விருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட சிறிது காலத்தில் 1926ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதலாம் திகதி தொடக்கம் அது அரசினர் உதவி நன்கொடை பெறும் பாடசாலையானது. கந்தையா மெய்கண்டானைத் தொடங்கி வைத்து இரண்டு ஆண்டுகள்கூட நிறைவேறவில்லை. தன் 33ஆவது வயதில் நோய்வாய்ப்பட்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகளில் 3 மெய்கண்டான். அவற்றுள் முதலாவது பண்ணாகம் மெய்கண்டான். இப்பாடசாலை இப்பொழுது தொண்ணூற்றெட்டு அகவையை அடைந்து நூற்றாண்டு காணும் ஒரு மகா வித்தியாலயமாக வளர்ச்சியடைந்துள்ளது. தொண்ணூற்று எட்டாவது ஆண்டில் மெய்கண்டான் தாபகர் மு.கந்தையாவின் உருவச்சிலை திறந்து வைக்கப்படுவது சிறப்பானது.

# அணிலுக்கும் ஓர் உலகம்!

தருமலிங்கம் லுகிர்தா
ஊடகக் கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

**மனிதன் தன் செல்லப் பிராணியாக பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்க்கும் விலங்குகளில் அணில்களும் ஒன்று. இற்றைக்கு 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த அணில்கள் மனிதர்களுடன் மனிதர்களாக வாழ்ந்து வருகின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள். இத்தகைய அணில்களின் உலகில் தத்தெடுக்கும் பண்பு நிறைந்திருக்கின்றது என்றால் அதை உங்களால் நம்ப முடியுமா? நம்புவது கடினமாயினும் அது தான் உண்மை. அந்த அம்சங்களை அறிய தொடர்ந்து பயணிப்போம்...**

அணில்கள் கொறித்துண்ணும் பாலூட்டி விலங்கின குடும்பத்தைச் சேர்ந்தவை. இவை அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் ஆபிரிக்கா, இந்தியா போன்ற இடங்களையும் தாய் நாடுகளாகக் கொண்டவை. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் மேற்கு அவுஸ்திரேலியாவுக்கு அணில்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. உலகெங்கிலும் 200 வகையான அணில் இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அணில்கள் குட்டி போட்டு தங்கள் இனத்தைப் பெருக்குகின்றன.

அணில்கள் தொடர்ந்து கொறித்துக்கொண்டே இருக்கும் தன்மை வாய்ந்தவை. அது ஏன் என்று எவராவது சிந்தித்ததுண்டா? அணில்களுக்கு 4 முன்பற்கள் இருக்கும். இந்த முன்பற்கள் மிக நீளமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் கூர்மையாகவும் தொடர்ந்து வளரக்கூடிய தன்மையும் கொண்டவை. ஆண்டுக்கு அரை அடி நீளம் வளர்ந்து வளரும். இதனால்தான் அணில்கள் மரப்பட்டை, பழ விதைகள் மற்றும் கையில் கிடைத்தவற்றையெல்லாம் தொடர்ந்து கொறித்துக் கொண்டே இருக்கும். இப்படி அணில்கள் கொறிக்காவிட்டால் பற்கள் தொடர்ந்து நீளமாக வளர்ந்துவிடும். அப்படி நீளமாக வளர்ந்து விட்டால் அதனால் வாயை அசைக்க முடியாது. இதனால் அவை பட்டினியில் இறக்கவும் நேரிடும்.

### மரநடுகையில் அணில்கள்

விலங்குகள் காடாக்கத்துக்கு தம்மை அறியாமல் துணைபுரிகின்றன. இது ஆய்வு ரீதியாகவும் அவதானங்களின் அடிப்படையிலும் எண்பிக்கப்பட்டுள்ளன. அணில்களும் இவ்வாறான காடாக்கங்களுக்குத் துணைபோகின்றன. பொதுவாக அணில்கள் மண்ணுக்கடியில் சேமித்து வைக்கும் விதைகளில் பாதி மரங்களாகவும், செடிகளாகவும் வளர்ந்து பூமிக்கு வளம் சேர்க்கின்றன.

அணில் மிகவும் திறமைசாலியானது. தன்னுடைய உணவைத் தேடுவதற்காக அது பலவிதமான குறுக்கு வழிகளைக் கையாள்கிறது. பல வழிகளை மேற்கொண்டு மிகவும் புத்திசாலித்தனமாக, தந்திரமாக, எளிய வழிகள் மூலம் அது தன்னுடைய உணவைத் தேடுகிறது. அணிலின் பார்வைத் திறன் மிகவும் கூர்மையாக இருக்கும். இதனால் மிக விரைவாகவே மற்ற எதிரி விலங்குகள் எங்கு செல்கிறது, எங்கு இருக்கிறது எனத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப எதிரி விலங்குகளிடம் சிக்காமல் விரைவாக தப்பிச்செல்லும். காட்டில் வாழும் பாலூட்டி விலங்குகளில் அணில் மட்டுமே அதிகமாக பகலில் வெளியே சுற்றித் திரியும். ஒரு ஆண் அணில், பெண் அணிலை சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தாலும் அதன் மணத்தை வைத்துக் கண்டுபிடித்து விடுமாம்.

அணில் இனங்களில் மிகச்சிறியது ஆபிரிக்க பிக்மி அணில் ஆகும். இது சுமார் 10 சென்டிமீற்றர் நீளம் கொண்டது. மிகப்பெரிய அணில் இந்திய ராட்சத அணில் ஆகும். இது 3 அடி நீளம் வரை வளரும். அணில்களில் 44 வகையான பறக்கும் அணில் வகைகள் இருக்கின்றன. உண்மையில் இது பறப்பதைப் போல இருந்தாலும் உடலில் இரு பக்கமும் ஒரு விரியும் சவ்வைப் பயன்படுத்தி காற்றில் சறுக்கிச் செல்கிறது. அது அதனுடைய மணிக்கட்டிலிருந்து கணுக்கால் வரை நீண்டிருக்கும் சவ்வை விரித்து ஒரு பரசூட்டில் மனிதர்கள் இறங்குவது போல இறங்கும். இது இயற்கை அணிலுக்கு கொடுத்த மிகப்பெரிய பரிசு.

### அணில்கள் தரும் கற்பிதம்



தத்தெடுக்கும் பழக்கத்தை தன்னகத்தே கொண்ட ஒரு பாலூட்டியாக அணில்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. பெண் அணிகள் எங்காவது அநாதரவான குட்டி அணிலைக் கண்டால், உடனடியாக உணவு தேடி வந்து கொடுக்குமாம். மூன்று நாள் பார்த்து விட்டு, தாய், தந்தை அற்ற அநாதை என்று உறுதி செய்த பிறகு அதனை தனது கூட்டுக்கு அழைத்துச் சென்று உணவளித்து, தன் குட்டிகளில் ஒன்றுபோல குதூகலமாக வாழ விடுமாம்.

அணில்களின் குடும்பவியல் வாழ்வமைப்பு மிகவும் அற்புதமானது. அன்பு, பாசம், பரிவு, காதல், கவனிப்பு என நல்லதோர் குடும்ப வாழ்வுக்கான அத்துணை குணாதிசயமும் பொங்கி வழியும் அணில்களின் வாழ்க்கை மனிதர்களுக்கு ஒரு முன்மாதிரி கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சங்க காலத்தில் வணிக நடைமுறைகள் எவ்வாறிருந்தன. அக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறான வணிகக் கலாசாரத்தைப் பின்பற்றினார்கள் என்பன தொடர்பில் இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்ந்து எண்பிக்கின்றது. கடந்த வாரத்தின் தொடர்ச்சி இவ்வாரம் பதிவாகின்றது)





பேராசிரியர்
சிவனேசன் சிவானந்த மூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# சங்க இலக்கியங்களில் வணிகமும் வணிக நடைமுறைகளும்

மானிடவியலாளர்களின் கருத்துப்படி வணிகத்தின் வளர்ச்சிக்கும் மானிட இனத்தின் பரிணாம வளர்ச்சிக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. ஆதிமனிதன் வேட்டையயாடியே தனது தேவைகளைப் பூர்த்திசெய்தான். தனது தேவைக்கு மேலதிகமானவற்றைப் பிறருக்குக் கொடுத்து அவர்களிடமிருந்து பதிலாகப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளத் தொடங்கியபோது வணிகத்தின் அடிப்படையான பாரிமாற்றம் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது. நாகரிகம் வளர்ச்சியடையாத காலத்தில் மனிதனுடைய தேவைகளும், அவற்றுக்கான தெரிவுகளும் வரையறுக்கப்பட்டிருந்தன. அக்காலத்தில் மனிதர்கள் பொருளாதார, உளவியல் ரீதியான தன்நிறைவு நிலையைக் கொண்டிருந்தார்கள். காலப்போக்கில் நாகரிகம் வளர்ச்சியடைய, மக்களின் தேவைகளும் வளர்ச்சியடைந்தன. இதன் விளைவாக பொருள்கள் மற்றும் சேவைகளின் பாரிமாற்றம் அடிப்படையானதாக மாறியது. இதன் முதல் படியாக 'பண்டமாற்று எண்ணக்கருவின்' தொழிற்பாடு தோற்றம்பெற்றது. ஆனால் காலவோட்டத்தில் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியும், நாகரிக வளர்ச்சியும் உற்பத்தியின் அளவிலும், இயலுமையிலும் பெரியளவு அதிகரிப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவாக மேலதிகமான உற்பத்திகள் ஏற்பட்டன. மேலதிகமான உற்பத்திகளை விற்பனை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் வாயிலாக 'வணிகம்' என்னும் துறை ஆரம்பித்தது. அன்று பொருள்களுக்குப் பதிலாக பொருள்கள் பரிமாற்றத்துடன் ஆரம்பமான வணிகம் இன்று இலத்திரனியல் தளங்களின் ஊடாகப் பல்வேறு தளங்களில் விரிந்து காணப்படுகின்றது.

'பண்டைகால வர்த்தகத்தின் சுருக்கமான வரலாறு' என்னும் நூலில் பண்டைக்கால வணிகத்தின் வரலாறு பற்றிக் குறிப்பிடும்போது கி.மு. 3,000ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்திய இராச்சியமானது செல்வச் செழிப்புடனும், நாகரிக மயப்படுத்தப்பட்டும் காணப்பட்டது என்றும், இதற்கான முதன்மைக் காரணம் அங்கு காணப்பட்ட விவசாயத்துக்கு உகந்த மண் வளத்தையும், ஏனைய செழிப்பான இயற்கை வளத்தையும் பயன்படுத்தி ஏற்றுமதி நோக்கிய அளவில் விவசாயத்தில் ஈடுபட்டு, மேலதிகமானவற்றை அயல் நாடுகளான பாலஸ்தீனம், லிபியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததுடன் அந்த நாடுகளிடமிருந்து வாசனைத் திரவியங்களை இறக்குமதியும் செய்து கொண்டனர். அதேவேளை அசிரிய வணிகர்கள் அரபிக் மொழியைப் பேசுபவர்கள். இவர்கள் வடஈரான், வடமேற்கு ஈரான், தென்கிழக்கு துருக்கி மற்றும் கிழக்கு சிரியா போன்ற பிரதேசத்தில் வாழ்ந்த பூர்விகக் குடிகள். இவர்கள் அக்காலத்தில் தமது வணிக செயற்பாடுகளை பாபிலோன், பாலஸ்தீனம், இந்தியா போன்ற நாடுகளுடன் கொண்டிருந்தனர். இவ்வாறு விரிவடைந்த வணிகத் தொடர்புகள் கிரேக்க தேசத்தின் எழுச்சியுடனும், கிரேக்க நாட்டு மாவீரன் அலெக்சாந்தரின் பிற நாடுகளின் மீதான படையெடுப்புகளின் பின்னரே வீழ்ச்சியடைந்தது. கி.மு. 608ஆம் ஆண்டளவில் எகிப்தியரும், பினிஷியர்களும் கடல் வழியாக கூட்டாக ஆபிரிக்கா, அரேபியா, இந்தியா, ஸ்பெய்ன் போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை வைத்திருந்தனர். இந்த நிலையில் இந்திய துணைக்கண்டத்தில் வணிகமானது சிறந்து விளங்கியது.

அதனால்தான் சங்க இலக்கியங்களில் வணிகர்களை 'இளங்கோக்கள்' என்றும் அழைத்தனர். கரிகால்வளவன் காலத்தில் அரச குலத்தைச் சேர்ந்த இளைஞர்களும் வாணிப குலத்தைச் சேர்ந்த இளைஞர்களும் காவிரிப்பூம்பட்டின வீதிகளில் ஒன்றாகச் சேர்ந்து யானை, குதிரை சவாரிகள் செய்தனர். இதன் மூலமாக வணிகர்களும், அரசர்களும் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் வாழ்ந்தார்கள் என்பது புலப்படுகின்றது. வணிகர்கள் அவர்களின் உழைப்புக்கு தக்கபடி பட்டங்களும் பொற்கிளிகளும் வழங்கப்பெற்று அரசர்களால் கௌரவிக்கப்பட்டனர். மேலும் சங்க காலத்தில் வணிகர்களையும், வைத்தியர்களையும் அதிகமாகப் போற்றியதுடன் இவ் இரு தொகுதியினரையும் சமமாக நோக்கினர். ஏனெனில் வணிகர்களும் வைத்தியர்கள் போன்று தொழில்சார்பான அறத்துக்கு முதன்மை கொடுத்து அறவழி ஒழுகியே வாழ்ந்தார்கள் என மதுரைக் காஞ்சி போற்றுகிறது. பட்டினப்பாலை வணிகரைப்பற்றி:

**கொலை கடிந்தும், களவுநீக்கியும்,**
**அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,**
**நல்ஆனொடு பகடுஓம்பியும்,**
**நான்மறையோர் புகழ்பரப்பியும்;,**
**பண்ணியம் அட்டியும், பசும்பதம் கொடுத்தும்,**
**புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை**
(பட்: **199 - 205**)

அரசர், அமைச்சர், சான்றோர் முதலானவர்கள் பின்பற்றும் அறங்களை வணிகர்களும் பின்பற்றி புகார் நகரில் வாழ்ந்தனர். அதாவது வாணிகர்கள் கொலை மற்றும் களவு போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடாதவர்களாகவும், மேலும் புண்ணியங்கள் பல செய்தும் வாழ்ந்தனர் என்பதைப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது.

தொன்மைக்காலத்தில் வணிகர் இலாபம் பெறுகின்ற நோக்கினைக் காட்டிலும் எல்லோரும் எல்லாம் பெற்று வாழவேண்டும் என்கின்ற சமூக நோக்கிலேயே வணிகம் செய்தனர். வணிகர்கள் கண்ணியத்துடனும் நடுநிலையுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள் என்பதனைப் பட்டினப்பாலையில் பின்வரும் வரிகள் சுட்டிக் காட்டுகின்றன:

**கொடுமேழி நசை உழவர்**
**நெடுநுகத்துப் பகல்போல,**
**நடுவுநின்ற நல்நெஞ்சினோர்,**
**வடுஅஞ்சி வாய்மொழிந்து,**
**தமவும் பிறவும் ஒப்ப நாடிக்**
**கொள்வதூஉம் மிகைகொளாது,**
**கொடுப்பதூஉம் குறைகொடாது,**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்**
**தொல்கொண்டித் துவன்றுஇருக்கைப்**
(பட்: **205 212**)

(தொடரும்..)

# சம்புப்புல் பாய்கள் வெம்மைக்கு ஏற்றதான ஓர் ஆயுதம்



றொமிலியற் நிவாகரன் டிலீசியா
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

குடாநாட்டின் வெம்மைக்கும் அதன் இதர காலநிலைக்கும் ஏற்றவாறான பொருள்களைப் பயன்படுத்தும்போது இந்தத் தட்பவெப்பத் தாக்கங்களை நாம் ஓரளவேனும் குறைத்துக்கொள்ள முடியும். ஆதலால், இயற்கையோடு இசைந்த எம் அன்றாட வாழ்வில் பயன்படுத்த பழக்கப்படுக்கொள்ள வேண்டும். அதுவே இன்றைக்குக் காலத்தேவையானதுமாகும். அந்த வகையில், சம்புப் புற்களைப் பயன்படுத்தி செய்யப்படும் பாய்களை யாழ்ப்பாணத்தில் இக்காலத்திலும் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர் சிலர். இன்னும் சொல்லப்போனால் குடும்பமொன்று தன் முழுநேரத் தொழிலாக இந்த வணிகத்தை உருப்படுத்தி - வலுப்படுத்தி வைத்துள்ளது அது தொடர்பான கட்டுரையே இது.


### இட அமைவு

பிரபாகரன் சுகந்திகா என்பவர் நல்லூர் செம்மணி வீதியில் முத்திரைச்சந்தியில் இந்தத் தொழிற்சாலையை இரண்டு வருடங்களாக நடத்திவருகிறார். சம்புப் புற்களே இந்தப் பாய் உற்பத்தியில் பிரதான மூலப்பொருள். பந்திப்பாய், குழந்தைகளுக்கான தடுக்கு எனப் பல வகைகளில் இந்தப் பாய்கள் உருவாக்கப்படுகின்றன. தொழிற்சாலை ஒப்பீட்டளவில் சிறிய தொழிற்சாலையாக இருந்தாலும் அது தன் இயலுமைக்கேற்ற வினைத்திறனுடன் ஆக்கபூர்வமான உற்பத்தியில் ஈடுபட்டுவருவதை அவதானிக்கக்கூடியதாகவே உள்ளது. பாய் உற்பத்திக்கான மூலப்பொருள்கள் வாதரவத்தை, செம்மணி, வரணி எனப் பல பிரதேசங்களிலிருந்து பெறப்படுகின்றது. இதன்மூலம் சம்புப்புல் சேகரிப்பாளர்களுக்கும் ஒரு வருவாய் கிடைக்கின்றது.

### எவ்வாறு தயாராகிறது

புற்களை வெட்டி காயவைத்து, காய்ந்த பின்னர் சின்னஞ்சிறு கட்டுக்களாக வெட்டி எடுக்கப்படுகின்றது. அதன் பின்னர் சுத்தம் செய்யப்படுகின்றது. சேற்றில் இருந்து புற்கள் எடுக்கப்படுவால் ஒவ்வாமை போன்ற நோய்களில் இருந்து பாதுகாப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இந்தத் தூய்மைப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் பின்னர்தான் சாயம்பூசி விதம்விதமான வடிவங்களில் பாய்கள் வடிவமைக்கப்படுகின்றன.

பிளாஸ்டிக் பாய்களை விட இயற்கையான இந்தப் பாய்கள், ஆரோக்கியம் மிக்கனவாகவும் குளிர்ச்சியானவையாகவும் அமைந்திருக்கின்றன. கொரோனா காலத்தில் விற்பனையில் சிறிது தொய்வு இருந்தாலும் இப்போது நாடெங்கிலும் சம்புப் பாய்களுக்கு நல்ல கேள்வியும், கிராக்கியும் ஏற்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவு ஓடர்கள் செய்யப்படுகின்றன. மின்சாரம் இல்லாமல் உடல்வலுவைப் பிரதானமாகக் கொண்டு இந்தப் பாய்கள் தயாரிக்கப்படுகின்றமை மற்றொரு சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பனைத்துறை, நாடகத்துறை, மேடையமைப்பு என பல்துறை வித்தகராகத் திகழும் கலைஞர் ஐயாத்துரையுடனான சந்திப்பு இது. கலைஞர்களை வாழும்போதே வாழ்த்தவேண்டும் என்ற சிந்தனையின் பாற்பட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# கலைஞர் ஐயாத்துரை கலைகளின் காப்பாளனாகவிருக்கும் பல்துறை வித்தகர்!





இரத்தினசிங்கம் றம்யா
மூன்றாம் வருடம்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

துரை என்று வாஞ்சையுடன் அழைக்கப்படும் ஐயாத்துரை என்பவர் ஒரு பல்துறைக் கலைஞர். ஒப்பனைத்துறை, நாடகத்துறை, மேடையமைப்பு என்று பல்துறை வித்தகராக இன்று அவர் அறியப்படுகின்றார். வட்டுக்கோட்டை கிழக்கில் 1946ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி பிறந்து அளவெட்டியில் வசித்து வருகின்றார். 1968ஆம் ஆண்டில் பாரம்பரிய கலைத்துறைக்குள் பிரவேசித்த அவர், 1968ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை பாரம்பரிய கலை ஒப்பனைகளுடன் சமூக நாடக ஒப்பனைகளையும் காலத்துக்கு ஏற்ற மாற்றம் கருதிய புதிய சிந்தனையுடன் செய்து வருகின்றார்.

**கலைகளின் ஊடுகடத்தி**

இவர், வாழ்க்கையின் முடிவு, தேசிங்குராஜா, இலங்கேஸ்வரன், நந்தனார், உலகம் சிரிக்கிறது, வேங்கை நாட்டு மன்னன், தந்தையைக் கொன்றவன், கோவலன் கண்ணகி, சத்தியவான் சாவித்திரி, காத்தவராயன்கூத்து போன்ற நாடகப் படைப்புக்களுக்கு சிறந்த ஒப்பனையை வழங்கியுள்ளார். ஒப்பனைப் பொருள்களைத் தானே பாதுகாத்து வருவதோடு அடுத்த தலைமுறைக்கும் பயிற்சியளித்து வருகின்றார்.

இவரது கலைப்பணியைப் பாராட்டி தெல்லிப்பளை கலாசாரப் பேரவை 2006ஆம் ஆண்டில் 'கலைச்சுடர்' விருதையும், கலாசார அலுவல்கள் திணைக்களம் 2013இல் 'கலாபூஷணம்' விருதையும், யாழ். மாநகரசபை 2013இல் கௌரவத்தையும் வழங்கி இருந்ததோடு, இவரது 50 வருட கலைப்பணியைப் பாராட்டி வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2018ஆம் ஆண்டுக்கான 'முதலமைச்சர்' விருதையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

**கலைஞர் ஐயாத்துரை தொடர்பான மிகுதி விடயங்கள் கேள்வி பதில் வடிவில்...**

**நீங்கள் நாடகத்துறைக்குள் எவ்வாறு ஈர்க்கப்பட்டீர்கள்?**

எனக்குச் சிறுவயதில் இருந்தே கூத்துக்கள் பார்ப்பதிலும், சினிமாப் படங்கள் மற்றும் புராண இதிகாசப் பாடல்கள் கேட்பதிலும் ஆர்வம் அதிகம். எனது 16, 17 வயதுகளில் இருந்தே வடமொழிக் கூத்துக்கள், இசை நாடகங்கள் என்பவற்றை அதிகமாகப் பார்த்தும் ரசித்தும் வந்திருக்கின்றேன். இதன்போதே நானும் ஒரு நாடகத்தை நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. இதனால் 1966ஆம் ஆண்டு பல நண்பர்களை இணைத்து ஒரு நாடகத்தைப் பழக்கினேன். ஆனால், அதுவும் இடைநடுவில் நண்பர்களின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டது. ஆனாலும் எனது முயற்சியை நான் கைவிடவில்லை. 1968ஆம் ஆண்டு இந்தியாவில் எழுதப்பட்ட 'தேசிங்குராஜா' (சோனகர்க்கும், சீக்கியர்க்கும் இடையிலான கதை) நாடகத்தில் ஒரு கதாபாத்திரத்தை நானே ஏற்று நடித்தேன். இதுவே என் வாழ்நாளில் முதன்முதலாக பாத்திரம் ஏற்று நடித்த நாடகமாகும். இதற்குப்பின்னர் 1968ஆம் ஆண்டிலிருந்து எனது பல்வேறு நாடகங்கள் மேடை ஏறத்தொடங்கின. நாடகங்களை சொந்தமாகத் தயாரிக்க வேண்டும் என்ற நோக்கில் 'வாழ்க்கையின் முடிவு' என்ற தலைப்பில் நாடகமொன்றை எழுதி, இவ் நாடகத்தின் பாத்திரங்களை நானே ஏற்று நடித்தேன். இதனைத் தொடர்ந்து, 1969ஆம் ஆண்டு 'இலங்கேஸ்வரன்' எனும் நாடகத்தில் இராவணனாக பாத்திரமேற்று நடித்தேன். இவ் நாடகம் 1.30 மணிநேரமாக மேடையேறியது. என் வாழ்வின் முக்கியமான ஒரு திருப்புமுனையாக இந்த நாடகம் அமைந்தது. இதற்குப் பின்னர் நந்தனார், உலகம் சிரிக்கிறது, வேங்கை நாட்டுமன்னன் போன்ற பல்வேறு நாடகங்களிலும் நடித்தேன்.

**இவ்வாறு நாடகம் நடித்த உங்களுக்கு எவ்வாறு ஒப்பனைக் கலைக்குள் ஆர்வம் வந்தது? அதற்கான காரணத்தைக் கூற முடியுமா?**

ஆரம்ப காலங்களில் ஒப்பனைக் கலைஞர்களுக்கு பற்றாக்குறை நிலவியது. அவ்வாறு ஒப்பனைக் கலைஞர்களைப் பிடித்தாலும் அவர்களுக்கு அதிகளவு செலவுசெய்ய வேண்டியிருந்தது. இதனால் ஒப்பனைக்கலை தொடர்பில் நானே அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வம் என்னுள் ஏற்பட்டது. இந்தக்காரணமே என்னை ஒப்பனைக் கலைஞானம் உடையவராக மாற்றியது எனலாம். இவ் ஒப்பனைக் கலைகளின் நுணுக்கங்களை அறிவதற்கும் இதனுள் ஆழமாகக் கால்பதிப்பதற்கும் வட்டுக்கோட்டை சிவனேசனின் வழிகாட்டுதலே எனக்கு உறுதுணையாக இருந்தது.

**உங்களை ஒப்பனைக்கலைஞராக நிரூபிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் எவை?**

1971ஆம் ஆண்டு நடிகமணி வைரமுத்துவின் நாடகங்களுக்குக் காட்சிகளையும் ஒப்பனைகளையும் நானே ஏற்படுத்திக்கொடுத்தேன். இவருடைய நாடகங்களில் ஒப்பனைகள், மேடைக்காட்சிகள் அமைக்கின்ற வேளை அவர் பல்வேறு புத்திமதிகளையும், ஒழுங்குவிதிமுறைகளையும் கற்றுக்கொடுத்தார். இதனால், இவருடன் இணைந்து மேற்கொண்ட பணிகள் எனக்கு பெரிய அனுபவத்தையும் அறிவினையும் கொடுத்ததுடன், சிறந்ததொரு ஒப்பனைக்கலைஞராக உருவாகுவதற்குக் களமாக அமைந்தது எனலாம்.

**'கலாபூஷணம்' விருதினைப் பெற்றபோது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?**

'கலாபூஷணம்' விருது எனக்கு மட்டுமல்ல என்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் நல்லதொரு மகிழ்வான விடயம், தருணம். அதைவிட அங்கேசென்ற பிறகு என் போன்ற கலைஞர்களை சந்தித்தது, அவர்களுடன் உறவினை ஏற்படுத்திக் கொண்டது மேலும்மேலும் மனநிறைவு. அங்கு தமிழர், சிங்களவர் என்ற வேற்றுமை இல்லாமல் அனைவரும் கலைஞர்கள் என்ற வகையில் உறவாடினோம். விருதினைப் பெற்றுக்கொண்ட பின் ஏனையவர்களும் கலைஞர்களும் பாராட்டி கட்டி அணைத்து கைகள் தந்தபோது பேரானந்தமாக இருந்தது. இவ்வாறான விருதுகளைப் பெறும் இடத்தில் நாம் இருக்கின்றோம் என்று நினைத்துப் பார்க்கும்போது பெருமையாகவும் இருந்தது.

**நாடகக்கலை தொடர்பில் எதிர்காலச் சந்ததிக்கு நீங்கள் கூறவிரும்பும் விடயம் என்ன?**

உண்மையில் நாடகக்கலை என்பது மக்களுக்கிடையே சமாதானத்தையும், நல்லுறவையும் ஏற்படுத்தவல்லது. ஆனால், இன்றைய தலைமுறையினர் இக்கலையின் முக்கியத்துவத்தை மறந்து செயற்படுகின்றனர். இதைவிட, இப்போதைய நாடகங்களில் நாடகங்களை நடிப்பவர்கள் வசனங்களை சரியாக உச்சரிப்பதில்லை. அதாவது, நல்ல தமிழில் கதைப்பதில்லை. அவர்களின் மொழி ஆங்கில மொழி உட்பட ஏனைய மொழிகள் கொண்டு காணப்படுகின்றன. இதனால், இத்தவறுகளை திருத்தி நம் பாரம்பரிய ஊடகங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டும். இதைத்தான் நான் எம் எதிர்காலச் சந்ததிச் செல்வங்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**இறுதியாக...**

நாடகக் கலைகளும், அதுசார் விடயங்களும் நாளுக்கு நாள் அழிவுப் பாதையை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் கலைஞர் ஐயாத்துரை போன்ற ஆளுமை மிக்க கலைஞர்களின் அனுபவமும் ஆலோசனைகளும் அறிவுரைகளும் கலைகளின் இருப்புக்கு குறிப்பாக நாடகக்கலைகளின் இருப்புக்கு அவசியமும் தவிர்க்க முடியாததுமாகும். இவர்களிடமுள்ள அனுபவங்களையும் தகவல்களையும் உரிய முறையில் ஆவணப்படுத்துவது கூட இக்காலத்தில் காலத்தேவையே. ■

# பிற்போடுதல் எனும் பெரும் குறைபாடு!

சி.நற்குணலிங்கம்

உலகம் உச்ச வேகத்துடன் இயங்கிக் கொண்டிருக்கையிலும், தாம் அன்றாடம் செய்யவேண்டிய கடமைகளைப் பிற்போடுபவர்கள் பலருள்ளனர். மனோதத்துவ நிபுணர்கள் இதை ஒருவகை இயந்திர செயற்பாடு என்கின்றனர். தள்ளிப்போடுதல் என்பது ஓர் அடிப்படை உளவியல் கோளாறின் அறிகுறியாகும். இருப்பினும் இது தனிப்பட்டமுறையில் எமக்கு எது முக்கியம் என்பதை அடையாளம் காண்பதற்கான ஒரு பயனுள்ள வழியாகவும் காணலாம். கையில் இருக்கும் பணியை நீங்கள் உண்மையிலேயே மதிக்கும்போது தள்ளிவைப்பது அரிது. ஒரு நிமிடத்தின் முக்கியத்துவம் புகைவண்டியை தவறவிட்டவனுக்குத் தெரியும், ஒரு விநாடியின் மதிப்பு விபத்தில் உயிர் பிழைத்தவனுக்குத் தெரியும். இதனால்தான் 'காலத்தை தள்ளிப்போடாதே, தாமதங்கள் அபாயமான முடிவைக் கொண்டுள்ளன' என்கிறார் ஷேக்ஸ்பியர். தள்ளிப்போடுவதற்கு பல காரணங்கள் உள்ளன. மனோதத்துவக் காரணங்கள் பெருமளவில் மாறுபட்டாலும் பொதுவாக கவலை, சுயமரியாதைபற்றிய தாழ்வுமனப்பான்மை, அக்கறை குறைவாக இருத்தல், சோம்பல்தன்மை, பயம், எதிர்த்துப் போராடுவதில் தயக்கம் மற்றும் தன்னைத் தானே தோல்வியாக்கும் மனப்பாங்கு ஆகியவற்றைச் சுற்றியவையாகவே அந்தக் காரணங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. காரியங்களைப் பிற்போடுதலென்பது மிகக் குறைந்த ஒருங்கிணைப்பு, கவனமின்மை மற்றும் அளவு கடந்த அலட்சியப்போக்கை விளைவிக்கும். ஒரு நடவடிக்கையை தள்ளிப்போடும் குணாதிசயம் என்பதை வகைப்படுத்தின், அது எதிர்மறையான தேவையற்றதாக மற்றும் தாமதிக்கும் வகையாக இருக்கும். அடுத்து குற்ற உணர்வுப் பிரச்சனை ஏற்படலாம் என்ற உணர்வுகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து மேலும் எதையும் தள்ளிப்போடும் மனப்பாங்கை அதிகரிக்கும். ஓரளவிற்கு தள்ளிப்போடும் மக்களை இது சகஜம்தான் என மதித்தாலும், இதுவே சகஜமாகிவிட்டால் வேலைகளுக்கு பாதகமாகிவிடும். கற்கும் மாணவர்கள் கற்றலை தள்ளிப்போட்டால் இறுதியில் தள்ளித்தான் நிற்க நேரிடும். சிந்திப்பதைக் கூட தள்ளிப்போடுபவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஏன் எனது மூளைக்கு வேலை கொடுக்க வேண்டும். யாரும் வந்தால் அவர்களது மூளையைப் பயன்படுத்தலாம்தானே என்ற சிந்தனையின் வெளிப்பாடே இது. முட்டாளுக்கு மூளைகூட சுமைதான். இது பலருக்கு சோம்பல் அல்லது சோம்பேறித்தனத்துக்கு ஒத்ததாகும். மன்னிப்பு கேட்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதனை தள்ளிப்போடாமல் உடனும் கேட்பதால் அன்றே நன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. எதையும் தள்ளிப்போடாதீர்கள். ஒருவர் அதிகப்படியாக தள்ளிப்போடும்போது பயனற்றதாக உணரமுடிகிறது. பின்னர் சோகம், பதட்டம் போன்ற உணர்வுகள்கூட வந்துசேரும். முடியாது என்று சொல்லவேண்டிய இடத்தில் அதை சொல்லாமல் தள்ளிப்போடக் கூடாது. முடியாது என்று சொல்ல வேண்டிய இடத்தில் முடியாது என்று சொல்லிவிடுங்கள். இது பல பிரச்சனைகளை ஆரம்பத்திலேயே தீர்த்துவிடும். நிகழ்காலத்தை தள்ளிப்போட நினைக்காதே. நாளை என்பது நிச்சயமற்றது. நிகழ்காலத்தில் நாளாந்தம் வாழப்பழகு. உன்னை நீ அறிந்து வாழ வேண்டும். அறிந்துகொள்வதை தள்ளிப்போடாதே. 'தன்னை அறிந்திடில் தனக்கொரு கேடில்லை, தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்' என்கின்றார் திருமூலர். ஒரு பொருளை வாங்குமுன் அதுபற்றி சிந்திப்பதை தள்ளிப்போடாதே. ஒரு பொருள் வாங்குமுன் அது நம் தேவைக்காகவா? நம் ஆசைக்காகவா? என்ற தெளிவு இருக்கவேண்டும். இருப்பின் சிக்கனம் தானாக வரும். 'சூரியன் என்னை படுக்கையில் பார்த்ததில்லை' என்பது ஜெபர்சன் கூற்று. உன் துடிப்பை தள்ளிப்போட்டு தூக்கத்தில் தொலைக்கலாமா? உழைப்பை தள்ளிப்போடாதே. எனினும் இந்த 'பிற்போடும் மனோநிலை' உடையவர்களாக அனைவரையும் கொள்ள முடியாது. தத்தமது வாழ்க்கை மற்றும் வேலையைப்பற்றிய தெளிவான பார்வைகொண்டவர்கள் இருக்கிறார்கள். எப்போதும் தங்கள் இலக்குகளை நோக்கி வழிநடத்தப்படுகிறார்கள். எனவே பொதுவாக தள்ளிப்போடுவதில் அவதானம் வேண்டும். கடமைகளில் கண்ணியம் காத்து வாழும் நாள்களை அர்த்தமுள்ளதாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 • 06 • 1947

மறைவு 31 • 08 • 2022

## திருமதி தங்கராஜா சறோஜா (சிவமலர்)

ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அம்மா
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால் பண்பினால் நட்பினால் பாசத்தினால்
ஆளுமையால் எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எம் அன்னையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்.

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நீங்காத துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

(CS 26314) A-1

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (22.08.2023) செவ்வாய்க்கிழமை
அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
## சண்முகநாதன் சயந்தன்

**(தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவும், ஆலய புனருத்தாரண தொண்டர் சபை தலைவரும்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (21.09.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மேலும் அன்னாரின் மறைவுச்செய்தியறிந்து நேரிலும். தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு. வெளிநாட்டு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**" இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் "**


**வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை.** **குடும்பத்தினர்.**

(CS 26313) M-1

# பதினொராம் ஆண்டு நினைவலைகள்
## வினாசித்தம்பி காசிலிங்கம்

(முன்னாள் பங்காளர்-
No.1, மதுபானச்சாலை)

**திதி: பூர்வ சஷ்டி (01.10.2022)**




அன்பிற்கோர் இலக்கணமாய்
பண்பிற்கோர் இருப்பிடமாய்
பாரினிலே எமை
- விட்டுச்சென்றாலும்
ஆறாது எம்துயரம்

**மனைவி, பிள்ளைகள்,**
**குடும்பத்தினர்.**
**64/4 A, பொற்பதி வீதி,**
**கொக்குவில்.**

(cs 52173) (N-1)

# மரண அறிவித்தல்

பிறப்பு 12 • 03 • 1948



இறப்பு 17 • 09 • 2023

## துரைச்சாமி தெய்வேந்திரநாதன்

(லிடஸ்டேல் எஸ்டேட். ஹல்ஹரனோயாவில் பணியாற்றி ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

கொடிகாமம் வடக்கு, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி தெய்வேந்திரநாதன் கடந்த (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கொடிகாமம் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி பொன்னம்மா தம்பதியரின் இரண்டாவது புதல்வனும். காலஞ்சென்ற சின்னத்தம்பியாபிள்ளை மற்றும் திருமதி வள்ளிநாயகி தம்பதியரின் பாசமிகு மருமகனும். திருமதி யோகமனோகரி அவ்களின் அன்புக் கணவரும். அஜந்தரூபன் (லண்டன்). பிரதீபா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும். காலஞ்சென்ற சிதம்பரநாதன் (கனடா) மற்றும் ஸ்ரீ ரஞ்சனிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும். ரஜீவ் மற்றும் தர்ஷனா ஆகியோரின் அன்பு மாமனாரும். திருமதி நந்தா (கனடா) மற்றும் சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும். கௌசல்யா (அமெரிக்கா). அருன் யோகேந்திரன் (கனடா). அரவிந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும். மயூரன் (லண்டன்). சொரூபன் (லண்டன்). சந்தோஷ் ஆகியோரின் அன்பு சின்ன மாமாவும், துவாரகா. கேஷனா. கேஷவி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் வடக்கு. பாலாவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:**
**குடும்பத்தினர்**
மனைவி - 077 840 5075
சகோதரி - 077 483 3972

**கச்சாய் வடக்கு,**
**கொடிகாமம்.**

(cs 40600) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 • 12 • 1930



மறைவு 19 • 09 • 2023

## ஆறுமுகம் தர்மலிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல. 588 /12. நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மலிங்கம் நேற்று (19.09.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை தியாகராசா, சரஸ்வதி. பிரகலாதன், திரிலோகேஸ்வரா ஆகியோரின் அன்புச் சகோதரனும். தவமணி. மோனாம்பிகை, காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் புவனேஸ்வரி. காலஞ்சென்ற கோசலாராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும். காலஞ்சென்ற அஜன் மற்றும் மீரா. அசோக்குமார். கௌசல்யா செல்வேந்திரா. கவிதா ரஞ்சித்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும். துவாரகன் தக்ஷாயினி ஆகியோரின் பெரிய தந்தையும். டிலக்சிகா. மதுரன். ஜிஷ்ணிக்கா. செல்வஜன். சரஸ்ணிக்கா. டிபாஞ்சலி. கிஷோபென் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2023) புதன்கிழமை இல.588 /12. நாவலர் வீதி. அரியாலையில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள். அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs 52177 (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டுச் சந்தேகநபர் சான்றுபொருள்களுடன் கைது

யாழ்ப்பாணம், செப். 20
யாழ்ப்பாண நகரப் பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடந்த 16ஆம் திகதி வீடுடைத்து பெறுமதியான தொலைபேசி மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் கொழும்புத்துறையைச் சேர்ந்த சந்தேகநபரை நேற்றுக் கைது செய்தனர். அவரிடமிருந்து தொலைபேசி மற்றும் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன. (ஒ-125)


## யாழ்நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் 31/2 பரப்புக் காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் முழுமையாக உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குளி தாபல்நிலையத்திற்கு அருகாமையில். கச்சேரி நல்லூர் வீதியில் உள்ளது. எதிர்பாக்கப்படும் விலை 55 மில்லியனுக்கு மேலாக எதிர்பார்க்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு:
- Whatsapp : +447963743585
- மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk-
- Local Contact : 021 222 7141 (Srilanka)

(cs.52141) (N.1)

## பெயர் மாற்றம்

போயிட்டி - இளவாலையில் வசிக்கும் **கைத்தாம்பிள்ளை காணிக்கைநாயகி** ஆகிய நான் எனது பெயரை
**கைத்தாம்பிள்ளை காணிக்கைநாயகி தங்கமதி**
என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் கைத்தாம்பிள்ளை காணிக்கைநாயகி தங்கமதி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs.52175) (N.1) **கைத்தாம்பிள்ளை காணிக்கைநாயகி தங்கமதி**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## நினைவுகளோடு கழிந்து விட்டது அப்பா பதினான்கு ஆண்டுகள்

எங்களுக்காக
15
04
1949



இறைவனுக்காக
24
09
2009

**அமரர் கந்தசாமி தங்கராசா (பத்தர்)**

**திதி: பூர்வபக்க ஷஷ்டி (20.09.2023)**

எங்கள் ஆசை அப்பாவே!
கண்ணீரில் தவிக்கவிட்டு எங்கே
அப்பா சென்றுவிட்டீர்கள் எங்கள்
கவலைகளைச் சொல்லி ஆற உங்கள்
மடி வேணும் அப்பா!

601, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

(cs.52100) (N.1)

## மணமகள் தேவை

1991ம் ஆண்டு பிறந்த 7 ல் சூரியன் செவ்வாய்
சுயதொழில் செய்யும் மணமகனுக்கு
மணமகள் தேவை
நட்சத்திரம் - உத்தரம்
கிரகபாவம் - 291/4

**077 0634 154**

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
முதியோர் நோயாளர் நிலையத்திற்கு
பெண் வேலையாட்கள் தேவை.

**0777 126 860/ 59**

## மணமகன் தேவை

1989 ஆம் ஆண்டு பிறந்த, திருவாதிரை நட்சத்திரம், 8 செவ்வாய், பாவம் 13 உடைய பெண்ணுக்கு (ஆசிரியர்) காரைநகரைப் பிறப்பிடமாகக்கொண்ட அரச உத்தியோகத்தில் உள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

**077 183 6625**

(cs 52172) (N-1)


# இளவயது மாரடைப்பு நாட்டில் அதிகரிப்பு!



கொழும்பு, செப். 20
நாட்டில் கடந்த 3 மாத காலப்பகுதியில் ஏற்பட்ட திடீர் மரணங்களில் மூன்றில் ஒரு பங்கு மாரடைப்பின் காரணமாக பதிவாகியுள்ளது.
இவர்கள் 50 வயதுக் குட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர் என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் மரண விசாரணை அதிகாரி சட்டத்தரணி இரேஷா சமரவீர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்,
கடந்த மூன்று மாதங்களில் கொழும்பு தேசிய மருத்துவமனையின் மரண விசாரணை நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆயிரத்து 500 பிரேதப் பரிசோதனைகளில் சுமார் 100 பேர் மாரடைப்பு மற்றும் நீரிழிவு காரணமாக உயிரிழந்துள்ளனர். இவர்கள் 50 வயதுக்குட்பட்டவர்களாவர். திடீர் மரணங்களில் மூன்றில் ஒரு பங்கு மாரடைப்பின் காரணமாகவே ஏற்பட்டுள்ளது. மாரடைப்பில் இறப்பவர்களில் இளைஞர்களே அதிகளவு எண்ணிக்கையில் பதிவாகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

## போலி...



தருமபுரம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்று பொருள் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட பணத்தில் 5 ஆயிரம்ரூபா போலிநாணயத்தாள் ஒன்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.
அதனையடுத்து தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய குறித்த வர்த்தகர் கைதுசெய்யப்பட்டார்.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், போலிநாணயத்தாள்கள் புழக்கம் குறித்து வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் அவதானத்துடன்செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். (அ-ச-113)


## மரண அறிவித்தல்

"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம"



**திருச்செல்வம் உருத்திரமணிதேவி**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் உருத்திரமணிதேவி நேற்று (19.09.2023) கனடாவில் இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 6176 505**
**021 222 9096**

இல 34, கேசாவில் பிள்ளையார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

# யா/ வரணி மத்திய கல்லூரி
# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

**கலைப்பிரிவு**



செல்வி
இராசரத்தினம் சுவர்க்கா - 3A
மாவட்ட நிலை -1



செல்வி
துரைராசா ஜதுசா - 3A
மாவட்ட நிலை -6



செல்வி
சிவகுமார் சாதனா - 3A
மாவட்ட நிலை -76

**கலைப்பிரிவு**
- செல்வன் யோகரட்ணம் ரட்சகன் A2B
- செல்வி கணேசலிங்கம் பிரியங்கா ABC
- செல்வி நற்குகம் சிவர்னா A2B
- செல்வி சந்திரசேகரம் தேனுஜா 3B
- செல்வி உதயலிங்கம் சுருதிகா A2B
- செல்வன் மதியழகன் மயூரன் ACS
- செல்வன் யசோறஞ்சன் லிந்துஜன் ACS
- செல்வன் தங்கலிங்கம் ததுஷ்ரன் ACS
- செல்வன் புனிதகுமார் ஹர்சிகன் B2C

**உயிரியல் விஞ்ஞானப் பிரிவு**
- செல்வன் கஜேந்திரன் பிரதாப் A2B
- செல்வி கிருஷ்ணபிள்ளை சவீனா 2CS

**பௌதிக விஞ்ஞானப் பிரிவு**
- செல்வி செந்தமிழ்ச்செல்வன் வர்னிதா BCS

**வர்த்தகப் பிரிவு**
- செல்வன் பரஞ்சோதி வேதுஜன் A2C

2022 (2023) பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ்.மாவட்டத்தில் கலைப்பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி செல்வி இ.சுவர்க்கா அவர்களையும் ஏனைய சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் வாழ்த்துவதில் நாம் பெருமை கொள்கின்றோம்.

**கல்லூரிச்சமூகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிருசுவிலில் வெடிபொருள்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 20

மிருசுவில், வடகாடு பகுதியில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான வெற்றுக் காணியை நேற்றுத் துப்புரவு செய்தபோது வெடிபொருள்கள் வெளிவந்துள்ளன.

காணியை பெக்கோ இயந்திரம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு, நிலம் மட்டம் செய்யும் பணி நேற்று இடம்பெற்ற போது பிளாஸ்ரிக் கொள்கலன் ஒன்று வெளி வந்துள்ளது. கொள்கலனிலிருந்து கிளைமோர் ஒன்றும் மிதிவெடி ஒன்றும் வெளியே வந்துள்ளது. (ஓ-100-27)

# வாளுடன் வீடுபுகுந்து பருத்தித்துறையில் கொள்ளை

பருத்தித்துறை, செப். 20

பருத்தித்துறை, அல்வாயில் வீடொன்றில் அதிகாலை வாளுடன் புகுந்த கொள்ளையன் வீட்டில் இருந்த பெறுமதியான கைத்தொலைபேசியைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ள சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

அல்வாய், கவிஞர் செல்லையா வீதியில் உள்ள வீட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் நித்திரையாக இருந்த சமயம் சத்தம் கேட்டு விழித்து பார்த்தபோது வீட்டுக்குள் வாளுடன் ஒருவர் நின்றுள்ளதை அவதானித்தாகவும், இதனை அடுத்து வீட்டில் இருந்தவர்கள் அலறல் சத்தம் போட்டதையடுத்து அங்கிருந்த பெறுமதியான கைத்தொலைபேசியை கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-100)

## முல்லையில்...

**முல்லைத்தீவு**

தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்த தடைவிதிக்குமாறு கோரி முல்லைத்தீவு பொலிஸார் சமர்ப்பித்த விண்ணப்பத்தை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது. இதேவேளை- புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையங்களின் சார்பில் இதேவிதமான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அவை வழக்காக ஏற்றுக்கொள்ளக் கூடியன இல்லை எனத் தெரிவித்து நிராகரிக்கப்பட்டுள்ளது.

**கொழும்பு**

'ஒடுக்கப்படும் தமிழ் மக்களோடு நிற்போம்' என்ற கோஷத்துடன் கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தால் மருதானையில் அமைந்துள்ள சமய, சமூக நடுநிலையத்தில் திலீபன் நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நினைவேந்தல் நிகழ்வைக் குழப்பும் வகையில் 'முதுகெலும்பு இருப்பவர்கள் ஆயத்தமாகுங்கள். கொழும்புக்கு வருகைதரும் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவோம்' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதிவுகள் நேற்று முன்தினமும், நேற்றும் சமூகவலைத்தளப்பக்கங்களில் அதிகளவில் பகிரப்பட்டன.

அதனையடுத்து திலீபன் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாகவும், வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் அநாவசியமான குழப்பங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வை இரத்துச்செய்வதாக கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கம் நேற்றுக் காலை அறிவித்தது.

இது இவ்வாறிருக்க பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அடுத்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் மருதானை, கோட்டை உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் திலீபனை நினைவு கூரும் நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடைவிதித்து உத்தரவு பிறப்பித்தது.

குறித்த நினைவேந்தலை, கொழும்பில் முதற்றடவையாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக புலனாய்வுப் பிரிவினர் தங்களுக்கு அறியப்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதனையடுத்து நீதிமன்றம், மருதானை, கொள்ளுப்பிட்டி, கொம்பனித்தெரு, கோட்டை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கு கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தைச் சேர்ந்த அருட்தந்தை சக்திவேல் உள்ளிட்ட தரப்பினருக்குத் தடை விதித்தது. அத்துடன் காலிமுகத்திடல், ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதியமைச்சு உள்ளிட்ட பகுதிகளுக்குள் குறித்த தரப்பினர் பிரவேசிப்பதற்கும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆறுபேரின்பெயர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டு, பொலிஸார் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரான திலீபன் என்பவரை நினைவு கூரும் செயற்பாடு இலங்கை சோஷலிஸக் குடியரசின் வர்த்தமானி1721/2 ஐயும், 2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான தேசிய ஒருமைப்பாடுகள் சட்டத்தையும் மீறுவதாகவும் உள்ளது என்றும், நடத்தப்படும் பேரணியை 1979ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவைச் சட்டத்தின் கீழ் தடை செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் தங்களது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மனு தொடர்பான ஆட்சேபனைகளை இன்று நீதிமன்றில் நேரிலாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ,26,19)

## டெங்குக்...

வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்திலே தற்போது டெங்கு நோய் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கின்றது. ஆனால், தற்போது ஆரம்பித்திருக்கின்ற வட கீழ்ப் பருவப் பெயர்ச்சி மழைக்குப் பின்னர் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாதம் முதல் பெப்ரவரி வரையான 5 மாதங்களிலே டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாக இருக்கும். இந்த ஆண்டு ஆயிரத்து 836 நோயாளர்கள் டெங்கு நோயுடன் இனம் காணப்பட்டுள்ளனர். டெங்கு நோய் காரணமாக ஒரு இறப்பும் பதிவாகியுள்ளது. கடந்த வருடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 460 நோயாளர்கள் இனம் காணப்பட்டதுடன் 10 பேர் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்திருந்தனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது நோயின் தீவிரம் குறைவாகவே உள்ளது.

வட கீழ்ப் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ள காரணத்தால் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்ப் பரம்பலை எதிர்வரும் மாதங்களில் கட்டுப்படுத்துவதற்காக யாழ். மாவட்டம் முழுவதும் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரங்களாகப் பிரகடனப்படுத்தி இருக்கின்றோம் - என்றார். (அ-ஓ,27,100)

## கை இழந்த...

நிலையில், கை அகற்றப்பட்ட சிறுமி நேற்று மீண்டும் பாடசாலைக்குச் சென்றபோது, சக மாணவர்கள் மலர்கொத்துக் கொடுத்து வரவேற்றனர்.

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 12 வயதுச் சிறுமியின் இடது கையின் மணிக்கட்டின் கீழ் அகற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மருத்துவமனை விடுதியில் கடமையில் இருந்தவர்களின் அசமந்தமே சிறுமியின் கை அகற்றப்படக் காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்த விடயம் நாடு முழுவதும் பேசுபொருளாகியிருந்த நிலையில், பல்வேறு மட்டங்களில் தற்போது விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தநிலையில், மருத்துவ சிகிச்சைகள் காரணமாக பாடசாலைக்குச் செல்லாதிருந்த சிறுமி, நீண்ட நாள்களின் பின்னர் நேற்றுமுதல் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்துள்ளார்.

நேற்றுப் பாடசாலை சென்ற அவருக்குப் பாடசாலைச் சமூகத்தினரும், சக மாணவர்களும் உற்சாகமாக வரவேற்பளித்தனர். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் எனப் பலரும் இதன்போது இணைந்திருந்தனர். (அ-எ-27,66,20,27,100)

## சீனா,...

என்றும், எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி நிற்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3 ஆவது இந்து பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலான பேச்சுகளில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதான வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியில் தலையிடுவதற்கு, இந்து சமுத்திர மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் விரும்பவில்லை. இந்த நாடுகள் தமது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு உட்பட அவர்களின் முதன்மையான விடயங்களில் கவனம் செலுத்தி, தமது நாடுகளின் இறைமை மற்றும் சுதந்திரத்தைப் பேணவே முயற்சிக்கின்றன.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளடக்கிய 'க்வொட்' நாடுகள் மற்றும் சீனாவின் இலக்குகளுடன் தொடர்பில்லாத இந்து சமுத்திர நாடுகள் மற்றும் தென் பசுபிக் பிராந்திய தீவு நாடுகள் என்பன தமது சொந்த அபிவிருத்தியையே முன்னுரிமையாகக் கொண்டிருக்கின்றன. அவற்றை மதிக்கத் தயாராக இருக்கும் எந்தவொரு தரப்பினருடனும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப இலங்கையும் செயற்பட்டு வருகின்றது.

தீவு நாடுகள் தொடர்பிலான பாதுகாப்பு உரையாடல்களை ஏற்றுக்கொள்ள முடியும் என்றாலும், அந்த நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவது பொருத்தமானதல்ல.

இலங்கை உட்பட பல தீவு நாடுகள், இந்து - பசுபிக் பிராந்தியம் தொடர்பில் உயர்மட்டக் கலந்துரையாடல்களில் ஈடுபடவில்லை. அமெரிக்கா, மாலைதீவில் தூதரகமொன்றைத் திறப்பது போன்ற அண்மைக்கால முன்னேற்றங்கள் வரவேற்கத்தக்கவை.

ஆசியான் அமைப்பின் தலையீடு, ரஷ்ய - உக்ரைன் போர் ஆகியவற்றின் காரணமாக இந்து சமுத்திரத்தில் அதிகாரச் சமநிலை உருவாகி வருகின்றது. இந்த மாறும் பூகோள நோக்கு, தீவு நாடுகளின் சுதந்திரத்தைப் பேணுவதற்கு ஆதரவளிப்பதுடன், மேலும் இந்து சமுத்திர 'ரிம்' சங்கம், ஆசியான் ஆகிய அமைப்புகளுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பைப் பேணவும் வேண்டும்.

அம்பாந்தோட்டை வர்த்தகத்துறை முகத்தை சீன இராணுவத் தளமாக முத்திரை குத்துவது தொடர்பில் இலங்கை கவலையடைகின்றது. இந்தியாவுடன் இணைந்து திருகோணமலைத் துறைமுகத்தை இலங்கை அபிவிருத்தி செய்து வருகின்றது - என்றார். (அ-ஓ,இ)

## இராணுவ...

நியூயோர்க்கில் நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான ஆசிய பசுபிக் தீவு நாடுகள் கலந்துரையாடலில் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகையிலேயே ஜனாதிபதி ரணில்இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நாடுகளுக்கு இடையிலான அதிகாரச் சண்டைகளில் ஈடுபடுவதற்கு இலங்கை விரும்பவில்லை. அத்துடன், இந்திய பெருங்கடலில் தமது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கு வல்லரசு நாடுகள் முயற்சித்து வரும் நிலையில், இலங்கைக்கு இராணுவ அபிலாஷைகள் எதுவும் இல்லை. குறித்த இராணுவச் செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக இருக்க இலங்கை விரும்பவில்லை - என்றார் ரணில். (அ-ஓ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் ஊடக அனுசரணையில் நடந்த

# றைனோஸ் கிரிக்கெட் லீக்கில் வராகி சூப்பர் கிங்ஸ் சம்பியன்



யாழ்ப்பாணம், செப்.20

உதயன் ஊடக அனுசரணையுடன் சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய றைனோஸ் கிரிக்கெட் லீக்கில் வராகி சூப்பர் கிங்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

தொடரின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை மாலை வட்டுக்கோட்டை வை.எம்.ஏச்.ஏ. மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் வராகி சுப்பர் கிங்ஸ் அணியும், கூல் போய்ஸ் அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கூல் போய்ஸ் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய வராகி சுப்பர் கிங்ஸ் அணி 10 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக ரஞ்சன் 17 ஓட்டங்களையும், நிமலேந்திரா 15 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

கூல் போய்ஸ் அணி சார்பாக மகிழ்ராஜ் இரண்டு ஓவர்கள் பந்துவீசி 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

118 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கூல் போய்ஸ் அணி 54 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுக்க வராகி சுப்பர் கிங்ஸ் அணி 57 ஓட்டங்களால் வெற்றிபெற்றுக் கிண்ணத்தைத் தனதாக்கியது. அந்த அணி சார்பாக சீராளன் 17 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் வராகி சுப்பர் கிங்ஸ் சார்பாக அபிசாந் இரு ஓவர்கள் பந்துவீசி 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக அபிசாந்தும், தொடர் ஆட்ட நாயகனாக நிரோஜ்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த துடுப்பாட்ட வீரராக கிருஷ்ணாவும், சிறந்த பந்துவீச்சாளராக அபிசாந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

கிண்ணத்தை வென்ற அணிக்கு இரண்டரை லட்சம் ரூபா பரிசிலும், வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக உதயன் குழுமத் தலைவர் ஈஸ்வரபாதம் சரவணபவன், பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் சுழிபுரம் விக்ரோறி யன்ஸ் விளையாட்டுக்கழகத் தலைவருமான ஜெயந்தன், சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக்கழகத்தின் உரிமையாளர் உதயராஜ், யுனிவேர்சல் ஸ்போர்ட்ஸ் உரிமையாளர் விதுசன், பாக்கியரத்தினம் ஹாட்வெயார் உரிமையாளர் பாலவர்ணன், அருள் மோட்டர்ஸ் நிறுவனத்தின் சுபோகரன், விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-125)

## ஜனாதிபதிப் பதவிக்கு பஸிலே பொருத்தமாம்

### விமலவீர கூறுகின்றார்



கொழும்பு, செப்.20

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு பஸில் ராஜபக்சவே தகுதியானவர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, அந்தக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதித் தேர்தலுக்கு நாம் தயாராகி வருகின்றோம். அதற்கிடையில் எந்தத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதை எதிர்கொள்ளவும் தயார். கடந்தமுறை இறுதி நேரத்தில்தான் மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்பட்டார். இந்தமுறையும் இறுதி நேரத்தில் பெயர் திரைநீக்கம் செய்யப்படும்.

கோத்தாபயவுக்குப் பதிலாக பஸில் ராஜபக்சவை களமிறக்க வேண்டும் என்று கடந்தமுறையும் நான் வெளிப்படையாகக் கூறியிருந்தேன்.

அடுத்த முறை களமிறங்குவதற்கும் பஸில் ராஜபக்ச பொருத்தமானவர் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன் - என்றார். (எ-44)

**காணி விற்பனைக்கு**

புத்தூரில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. புத்தூர் மீசாலை பிரதான வீதியில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km. 1 பரப்பு 5 லட்சம்.

**077 8680 790**

**ஒப்பந்த காரர்கள் தேவை**

யாழ். நாவலர் வீதியில் பழைய வீட்டு கட்டடம் ஒன்றினை இடித்து துப்புரவு செய்வதற்கு ஒப்பந்த காரர்கள் தேவை.

**071 186 2611**

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி


- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



**021 222 8093** 17, Kandy Road, Jaffna

# மரண அறிவித்தல்

மண்மகிழ் 10 • 09 • 1929



கண் நெகிழ 16 • 09 • 2023

## இளையதம்பி பாலகிருஸ்ணன்

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா, நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி பாலகிருஸ்ணன் கடந்த (16.09.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி இராமாசிப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமநாதன் லெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், தனரெத்திபூபதியின் பாசமிகு அன்புக் கணவரும், கிருபாநிதி, கிருபாகரன், பிரபாநிதி, நிரூபா, வசீகரன், சொரூபா, சசீதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகுமாரன், மைதிலி, சண்முகராஜன், அம்பிகைபாகன், சுபாசினி, சுதர்சன், கலா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜா + போல், சாரா, ஸ்ரீபன், சபீதன், கோபிதன், ஜனிதா + நீல், விபிதா, லக்ஸன், றிஸ்மா, லக்ஷிகா + மயூரன், கிரீஷன், அஸ்வினி, சாயகி, நாயகி, அக்ஷயன், அஷ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், பேற்றனின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, சின்னம்மா, சிவயோகம், கனகம்மா, சண்முகநாதன், நாகமுத்து, கோபாலபிள்ளை மற்றும் அருணாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வீரவாகு, கனகசுந்தரம், பரமலிங்கம், புனிதவதி மற்றும் புஸ்பராணி, பூலோகசுந்தரி, ஞானசோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2023) வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**5 ஆம் வட்டாரம், நயினாதீவு.**

(cs 52174) (N-1)

**தகவல்: குடும்பத்தினர்**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org